தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### இலவசகால்நடை மருத்துவ முகாம்

முன்சிறை ஊராட்சி ஒன்றியத்துக்குள்பட்ட பைங்குளம் ஊராட்சியில், இலவச கால்நடை மருத்துவ முகாம் நடைபெற்றது.

முகாமுக்கு ஊராட்சித் தலைவர் சந்திரகுமார் தலைமை வகித்தார். முன்சிறை வட்டார கால்நடை மருத்துவர் பைஜூ முன்னிலை வகித்தார்.

இதில் கால்நடைகளுக்கு செயற்கை கருவூட்டுதல், சினை பரிசோதனை, குடற்புழு நீக்கம், கோமாரி நோய் தடுப்பு ஊசி உள்ளிட்ட சிகிச்சைகள் அளிக்கப்பட்டது.

முகாமில் கால்நடை பராமரிப்பு உதவியாளர் ராஜூ, வார்டு உறுப்பினர் சந்தோஷ்குமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

### கரும்பு விலை: டன்னுக்கு ரூ.3,500 வழங்க வேண்டும்: கருணாநிதி

கரும்பு கொள்முதல் விலையை டன்னுக்கு ரூ.3,500-ஆக உயர்த்தி வழங்க வேண்டும் என்று திமுக தலைவர் கருணாநிதி வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக திங்கள்கிழமை அவர் வெளியிட்ட அறிக்கை:-

திமுக ஆட்சியில் விவசாயிகள், வேளாண் துறை அதிகாரிகள், சர்க்கரை ஆலை நிர்வாகம் ஆகியோர் பங்கேற்கும் முத்தரப்பு கூட்டம் ஒவ்வோர் ஆண்டும் நடத்தப்படும். அந்தக் கூட்டத்தில் எடுக்கப்படும் முடிவின்படி, கரும்புக்கு கொள்முதல் விலை நிர்ணயம் செய்யப்படும்.

ஆனால் இப்போது அதிமுக ஆட்சியில் முத்தரப்பு கூட்டமே நடத்தப்படுவதில்லை. ஒரு தலைப்பட்சமாக அரசின் அதிகாரப்படிதான் கரும்புக்குக் கொள்முதல் விலை நிர்ணயிக்கப்படுகிறது.

திமுக பொதுக்குழுவில் நெல் கொள்முதல் விலையை குவிண்டாலுக்கு ரூ.2 ஆயிரமும், கரும்பு கொள்முதல் விலையை குறைந்தபட்சம் டன் ஒன்றுக்கு ரூ.3,500-மும் வழங்க வேண்டும் என்று வலியுறுத்தினோம்.

ஆனால் கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.2,650 மட்டும் கொள்முதல் செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இது கரும்பு விவசாயிகள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது என்று அவர் கூறியுள்ளார்.

### பசு வதையை தடை செய்யக் கோரி இந்து முன்னணி மனு

பசு வதையை தடை செய்யக் கோரி, இந்து முன்னணி சார்பில் கோவை மாவட்ட ஆட்சியரிடம் திங்கள்கிழமை மனு அளிக்கப்பட்டது.

அந்த மனுவில் கூறியிருப்பதாவது: விவசாயத்துக்கு ஜீவ நாடியாக இருந்து வருகிறது பசு. மாட்டுப் பொங்கலுக்கு மாடுகளை குளிப்பாட்டி மலர் மாலையிட்டு வணங்குகிறோம்.

இந்நிலையில் சமீப காலமாக இறைச்சிக்கு என்று வாங்கப்படும் மாடுகள், முறையான மருத்துவ சான்றிதழ் இல்லாமல் சட்டத்துக்குப் புறம்பாக கடத்தப்படுகின்றன. இதில் பசுக்கள், கன்றுக்குட்டிகளும் அடங்கும்.

எனவே பசு வதையை தடை செய்வதுடன், முறையான அனுமதியின்றி வெளிமாநிலங்களுக்கு கடத்தப்படும் பசுக்கள், மாடுகளை மீட்டு கோசாலைகளில் ஒப்படைக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

மாவட்டத் தலைவர் தசரதன், மாவட்ட பேச்சாளர் கிருஷ்ணன், செய்தித் தொடர்பாளர் சசிகுமார் உள்பட பலர் உடனிருந்தனர்.

### பால் கொள்முதல் விலை லிட்டருக்கு ரூ.3 உயர்வு: ஜெயலலிதா

பால் கொள்முதல் விலையை உயர்த்துவது தொடர்பாக, தலைமைச் செயலகத்தில் முதல்வர் ஜெயலலிதா தலைமையில் திங்கள்கிழமை நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்ற அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள்.

கொள்முதல் விலை உயர்த்தப்பட்டாலும், பால் விற்பனை விலை உயர்த்தப்பட மாட்டாது என அவர் தெரிவித்துள்ளார். ஆவின் நிறுவனத்துக்கு வழங்கப்படும் பாலின் கொள்முதல் விலையை உயர்த்தித் தர வேண்டும் என்று பால் உற்பத்தியாளர்கள் நலச் சங்கத்தினர் கோரிக்கை விடுத்தனர். இந்த கோரிக்கையைப் பரிசீலிக்கும் வகையில், தலைமைச் செயலகத்தில் முதல்வர் ஜெயலலிதா தலைமையில் ஆய்வுக் கூட்டம் திங்கள்கிழமை நடைபெற்றது. இதில் அமைச்சர்கள் ஓ.பன்னீர்செல்வம், நத்தம் விஸ்வநாதன், கே.பி.முனுசாமி, வைத்திலிங்கம்*- உள்ளிட்டோரும், தலைமைச் செயலாளர் ஷீலா பாலகிருஷ்ணன் உள்ளிட்ட அதிகாரிகளும் பங்கேற்றனர்.கூட்டத்துக்குப் பிறகு முதல்வர் ஜெயலலிதா வெளியிட்ட அறிவிப்பு: பசுந்தீவனம் மற்றும் உலர் தீவனம் ஆகியவற்றின் விலை, பணியாளர்களின் சம்பளம், கறவை மாடுகளின் விலை மற்றும் மருத்துவச் செலவு ஆகியவற்றை கணக்கில் கொண்டு, அண்டை மாநில கூட்டுறவு பால் சங்கங்களும், தனியார் பால் நிறுவனங்களும் பாலின் விலையையும், கொள்முதல் விலையையும் உயர்த்தியுள்ளன.இந்தச் சூழ்நிலையில், தமிழகத்தில் பால் உற்பத்தியாளர்களின் கோரிக்கையில் உள்ள நியாயத்தைக் கருத்தில் கொண்டு பால் கொள்முதல் விலையை உயர்த்தித் தர உத்தரவிட்டுள்ளேன். உயர்வு எவ்வளவு? பசும் பாலுக்கான கொள்முதல் விலை லிட்டருக்கு ரூ.3 ஆகவும், எருமைப் பாலுக்கான கொள்முதல் விலை லிட்டருக்கு ரூ.3 ஆகவும் உயர்த்தி வழங்கப்படும். இந்த விலை உயர்வு வரும் ஜனவரி 1 ஆம் தேதி முதல் அமலுக்கு வரும். இதையடுத்து பசும்பால் கொள்முதல் விலை லிட்டருக்கு ரூ.20-லிருந்து ரூ.23 ஆகவும், எருமைப்பால் விலை லிட்டருக்கு ரூ.28-லிருந்து ரூ.31 ஆகவும் உயர்த்தி வழங்கப்படும். இந்த உயர்வால் தமிழகத்தில் கூட்டுறவு அமைப்பின் கீழுள்ள சுமார் 22.50 லட்சம் பால் உற்பத்தியாளர்கள் பயன் அடைவார்கள். mபால் விற்பனை விலை உயராது: இதன்மூலம் ஆண்டுக்கு ரூ.273.75 கோடி அளவுக்கு பால் உற்பத்தியாளர்கள் பயன் பெறுவார்கள். கொள்முதல் விலை உயர்த்தப்பட்டாலும், நுகர்வோர் நலனைக் கருத்தில் கொண்டு பால் விற்பனை விலை உயர்த்தப்பட மாட்டாது என்று முதல்வர் ஜெயலலிதா அறிவித்துள்ளார்.

**கரும்பு கொள்முதல் விலை நிர்ணயம்: பாரதிய கிசான் சங்கம் அதிருப்தி**

தமிழக அரசு அறிவித்த கரும்பு கொள்முதல் விலை கடந்த ஆண்டை விட குறைவு. எனவே, விப்லையை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று பாரதிய கிசான் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து அச்சங்கத்தின் கரும்பு பிரிவின் மாநில ஒருங்கிணைப்பாளர் சி.முனுசாமிரெட்டி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தமிழக அரசின் விலை நிர்ணயம் விவசாயிகளுக்கு அதிர்ச்சியையும் வேதனையையும் அளிக்கிறது. கொள்முதல் விலையை ஏற்றி அறிவிக்கும் என அனைத்து கரும்பு விவசாயிகளும் எதிர்பார்த்து இருக்கையில் கடந்த ஆண்டை விட நூறு ருபாய் விலையை குறைத்து அரசு அறிவிக்கும் என யாரும் எதிர்பார்க்கவில்லை.

கரும்பு பயிருக்கான உரங்கள், ஆள்களின் கூலி ஆகியவை அதிகரித்து விட்ட நிலையில் கொள்முதல் விலையைக் குறைத்த காரணம் தெரியவில்லை.

இந்த விலையை மறுபரிசீலனை செய்து மறு கொள்முதல் விலையை தமிழக அரசு விரைவில் அறிவிக்கும் என நம்புகிறோம் என தெரிவித்துள்ளார்.

**கரும்பு டன்னுக்கு ரூ.4 ஆயிரம் கோரி விவசாயிகள் ஆர்ப்பாட்டம்**

கரும்புக்கு டன்னுக்கு ரூ.4 ஆயிரம் விலை நிர்ணயம் செய்யக் கோரி, தமிழக விவசாயிகள் சங்கத்தின் சார்பில் திங்கள்கிழமை தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் சங்கத்தின் மாநிலத் தலைவர் எஸ்.ஏ.சின்னசாமி தலைமை வகித்து பேசியது:

தமிழக அரசின் கரும்பு விலை உயர்வு அறிவுப்பு விவசாயிகளுக்கு ஏமாற்றம் அளிக்கிறது. ஆட்சிக்கு வந்த உடன் கரும்புக்கு உரிய விலை தரப்படும் என்று அறிவித்தனர். தற்போது மூன்றாண்டுகள் கடந்த நிலையில் உரிய விலை

தரப்படவில்லை. எனவே, கரும்பு வெட்டுக் கூலியை அரசே ஏற்று, டன் ஒன்றுக்கு ரூ.4 ஆயிரத்தை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேபோல, பால் கொள்முதல் விலையை பசும்பால் லிட்டருக்கு ரூ.25-ம், எறுமை பால் லிட்டருக்கு ரூ.35-ம் என வழங்க வேண்டும். வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு கடன் வசூல் என்ற பெயரில் வங்கிகளின் முகவர்கள் டிராக்டர், உழவுக் கருவிகளை பறிமுதல் செய்து வருவதைக் கைவிட வேண்டும்.

விவசாயிகளிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட டிராக்டர்களை நிபந்தனை இன்றி திருப்பி தர வேண்டும். காட்டுப் பன்றியை வன விலங்கு பட்டியலில் இருந்து நீக்க வேண்டும். மஞ்சள் குவிண்டாலுக்கு ரூ.10 ஆயிரம் விலை நிர்ணயம் செய்ய வேண்டும் என்றார் அவர். இதில், சங்கத்தின் மாவட்டத் தலைவர் பி.ஆர்.செங்கோடன், மாவட்டச் செயலர்கள் கே.சக்திவேல், கே.குப்புசாமி, மாவட்டப் பொருளாளர் பழனி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**கால்நடை வாரச் சந்தை ஜனவரி முதல் செயல்பட அனுமதி**

தருமபுரி மாவட்டத்தில் கோமாரி நோய் கட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதால் நிறுத்திவைக்கப்பட்டிருந்த கால்நடை வாரச் சந்தை ஜனவரி முதல் செயல்பட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் கே.விவேகானந்தன் திங்கள்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

வரும் காலங்களில் கால்நடைச் சந்தைகள் கூட்டும் போதும், கால்நடைகளை விற்பனை செய்யும் போதும் தொற்றுநோய் பரவாமல் தடுப்பதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும். சந்தைகள் கூடும் முன் பிளிச்சீங் பவுடரால் கிருமி நீக்கம் செய்ய வேண்டும். கால்நடைகளை அண்டை மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்வோர் கால்நடைகளுக்கு காற்றோட்டம் கிடைக்கும் வகையில் வண்டியில் ஏற்றிச் செல்ல வேண்டும்.

மேலும், வாகன உரிமையாளர்கள் கால்நடைப் பராமரிப்புத் துறை உதவி இயக்குநர் நிலையில் உள்ள அலுவலரிடம் உரிய சான்று பெற்ற பின்னரே கால்நடைகளை வாகனங்களில் ஏற்றிச் செல்ல வேண்டும் என்றார் அவர்.

### கரும்புக்கு கூடுதல் விலை தேவை

கரும்புக்கு கூடுதல் கொள்முதல் விலையை வழங்க மாவட்ட மதிமுக வலியுறுத்தியுள்ளது.

பெரம்பலூரில் மாவட்ட மதிமுக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் மாவட்ட அவைத்தலைவர் செல்ல. கதிர்வேல் தலைமையில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.மாவட்ட துணைச் செயலர் ரபுதீன், மாவட்டப் பொருளாளர் ஜெயசீலன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்டச் செயலர் செ. துரைராஜ், கட்சியின் செயல்பாடுகள், தேர்தல் பணி குறித்து விளக்கினார்.கூட்டத்தில் மக்களவை தேர்தலில் மதிமுக கூட்டணியின் வேட்பாளரை வெற்றிபெற முழுமையாகச் செயல்படுவது. துணை அமைப்புகளின் நிர்வாகிகளை நியமனம் செய்வது. கரும்பு டன்னுக்கு கொள்முதல் விலையை அரசு கூடுதலாக வழங்க வேண்டும்.பெரம்பலூர் மாவட்டத்தில் கோமாரி நோயைக் கட்டுப்படுத்தவும், நோயால் இறந்த மாடுகளுக்கு நஷ்ட ஈடும் வழங்க வேண்டும். பெரம்பலூரிலிருந்து நொச்சியம், செல்லியம்பாளையம், நடுவலூர், கீழக்கணவாய் வழியாக புதிய வழித்தடத்தில் அரசுப் பேருந்து இயக்க வேண்டும்.பருவமழை பொய்த்துவிட்டதால் விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும். தமிழ்நாட்டில் அரசியல் மாற்றத்தை ஏற்படுத்த மாணவர்கள், இளைஞர்கள், நடுநிலையாளர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த பிரசாரம் மேற்கொள்வது.

வேப்பந்தட்டையில் அரசுக் கலைக்கல்லூரி அமைப்பதற்கு தமிழக அரசுக்கு நன்றி தெரிவிப்பது என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஒன்றியச் செயலர்கள் முத்து, ரெங்கராஜ், சுப்புராயன், தியாகராஜன், சிகாமணி, ராஜா, ஜெயக்குமார் உள்பட பலர் கலந்து கொண்டனர். நகரச் செயலர் ராஜேந்திரன் வரவேற்றார். மாவட்ட இளைஞரணித் துணைச் செயலர் நீலமேகம் நன்றி கூறினார்.

**"பால் கொள்முதல் விலை உயர்வு போதுமானதாக இல்லை'**

தமிழக அரசால் அறிவிக்கப்பட்டுள்ள பால் கொள்முதல் விலை உயர்வு போதுமானதாக இல்லை என, தமிழக விவசாயிகள் சங்கத்தின் மாநிலப் பொதுச் செயலாளர் ராமகவுண்டர் திங்கள்கிழமை தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் கூறியது:

பால் கொள்முதல் விலை மூன்று ரூபாய் உயர்த்தி தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. இந்த விலை உயர்வு போதுமானதாக இல்லை. ஒரு லிட்டர் பாலுக்கு ரூ.10-ம், மானியம் ரூ. 5-ம் வழங்க வேண்டும் என, தமிழக அரசை வலியுறுத்தினோம்.

ஆனால், தற்போது அறிவிக்கப்பட்டுள்ள பால் கொள்முதல் விலை உயர்வை ஏற்றுக் கொண்டாலும், எங்களது கோரிக்கையை மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டும் என்றார் ராமகவுண்டர்.

**விதைகளை  சேதப்படுத்தும் பறவைகள்:விவசாயிகள் கவலை**

ஆறுமுகனேரி பகுதியில் நாற்றாங்காலில் உள்ள நெல்விதைகளை பறவைகள் அள்ளிச் சென்றதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

தாமிரவருணி ஆற்றின் கடைமடை பாசனப் பகுதியான ஆறுமுகனேரி பொய்யாங்குளம் பகுதியில் ஆண்டுக்கொரு முறைதான் பிசான பருவம் நடைபெற்று வருகிறது. கடந்தாண்டு மழை பொய்த்ததால் அதுவும் நடைபெறவில்லை.

இதனால் முள் செடிகள் மண்டி கிடந்த வயல்களை சீரமைத்து தற்போது தாமதமாக பணிகளை விவசாயிகள் தொடங்கியுள்ளனர்.

நாற்றுப்பாவும் பணிகள் நடைபெற்று வரும் நிலையில் சில விவசாயிகள் வயலில் நாற்றங்காலில் புறா, கிளி, புல் தாரா போன்ற பறவைகள் விழுந்து நெல் விதைகளை அள்ளிச் சென்றுவிட்டன.

இதனால் அப்பகுதி விவசாயிகள் மிகவும் கவலை அடைந்துள்ளனர்.

## புதுவை அருகே விவசாயிகள் சாலை மறியல்

புதுவையை அடுத்த அரும்பார்த்தபுரம் வேளாண் கூட்டுறவு வங்கியில், ரூ.50 லட்சம் மதிப்புள்ள அடகு நகைகள் மோசடி தொடர்பாக, ஊழியர்களைக் கண்டித்து விவசாயிகள் திங்கள்கிழமை சாலை மறியல் செய்தனர்.

அரும்பார்த்தபுரத்தில் உள்ள தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கத்தில் ஏராளமான விவசாயிகள் நகைகளை அடகு வைத்து கடன் பெற்றுள்ளனர். இதற்கிடையே சிலர், நகைகளை மீட்பதற்காக வங்கிக்குச் சென்றனர். அப்போது, ஏற்கெனவே உங்கள் நகைகளை வாங்கிச் சென்று விட்டீர்கள் என ஊழியர்கள் பதில் கூறியுள்ளனர்.

அதிர்ச்சியடைந்த விவசாயிகள், கூட்டுறவுத் துறை இயக்குநரிடம் புகார் செய்தனர். கடந்த 2011-2012ஆம் ஆண்டுக்கான கணக்கை தணிக்கை செய்த போது, விவசாயிகள் அடகு வைத்திருந்த ரூ.50 லட்சம் மதிப்பிலான நகைகளை வங்கி ஊழியர்கள் தங்கமணி, புஷ்பராஜ் ஆகியோர் கையாடல் செய்து மோசடி செய்தது தெரியவந்தது.

இச்சம்பவம் தொடர்பாக கூட்டுறவுத் துறை சார்பில் போலீஸிலும் புகார் செய்யப்பட்டது. நகைகள், சேமிப்பு பணம் ஆகியவற்றை மீட்டுத் தர வேண்டும் என விவசாயிகள் மத்திய கூட்டுறவு வங்கியை அணுகினர்.

ஆனால் 2 ஆண்டுகள் கழிந்தும் எந்த பலனும் ஏற்படவில்லை. இதனால் ஆத்திரமடைந்த பாதிக்கப்பட்ட விவசாயிகள், விவசாய தொழிலாளர் சங்க மாநில பொதுச் செயலர் பாலகிருஷ்ணன் தலைமையில் புதுவை-விழுப்புரம் சாலையில் திங்கள்கிழமை மறியலில் ஈடுபட்டனர். மறியல் நடந்தது.

ரெட்டியார்பாளையம் எஸ்.ஐ. முருகன் மற்றும் போலீஸார் வந்து பேச்சு நடத்தினர். விசாரணையை விரைவில் முடித்து நகைகளை மீட்டுத் தருவதாக உறுதி கூறினர். இதையடுத்து மறியல் கைவிடப்பட்டது. மறியலால் விழுப்புரம் சாலையில் 1 மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

### பனிப்பொழிவால் நெடுஞ்சாலை மூடல்

ஜம்மு: கடும் பனிப்பொழிவு காரணமாக, 300 கி.மீ., நீள, ஜம்மு - ஸ்ரீநகர் தேசிய நெடுஞ்சாலை, தொடர்ந்து, இரண்டாவது நாளாக மூடப்பட்டுள்ளது. சாலையில், பல இடங்களில், பல அடி உயரத்திற்கு, பனி கொட்டிக் கிடப்பதால், வாகன போக்குவரத்து, முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளது. இதனால், சாலையின் இருபுறங்களிலும், நூற்றுக்கணக்கான லாரிகளும், பஸ்களும் காத்துக் கிடக்கின்றன.

### கரும்பு விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை? தமிழக அரசு திடீர் பரிசீலனை

கரும்பு கொள்முதல் விலை உயர்வுக்கு, விவசாயிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வரும் நிலையில், அதை சமாளிக்க, ஊக்கத்தொகை வழங்குவது குறித்து, அரசு பரிசீலித்து வருவதாக தெரிகிறது.

ஆண்டுதோறும், சர்க்கரை பருவம் துவங்கும் போது, மத்திய, மாநில அரசுகள், கரும்புக்கான கொள்முதல் விலையை நிர்ணயம் செய்கின்றன. இந்த ஆண்டு மத்திய அரசு சார்பில், டன்னுக்கு 2,100 ரூபாய் அறிவிக்கப்பட்டுள்ளது. மாநில அரசு, அதனுடன், 550 ரூபாய் சேர்த்து, டன்னுக்கு 2,650 ரூபாயை, கொள்முதல் விலையாக அறிவித்துள்ளது. இரண்டு ஆண்டுகளாக, மத்திய அரசை விட, 650 ரூபாய் கூடுதலாக அறிவித்த, மாநில அரசு, இந்த ஆண்டு, 100 ரூபாய் குறைத்துள்ளது. சர்க்கரை ஆலை நிர்வாகங்களின் நெருக்கடி தான், இதற்கு காரணம் என, விவசாய சங்கங்களின் நிர்வாகிகள் புகார் கூறி வருகின்றனர். தற்போதுள்ள நிலையில், "டன் கரும்புக்கு, 3,500 ரூபாய் வழங்க வேண்டும்' என, அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். விரைவில் மிகப்பெரிய போராட்டம் நடத்த

விவசாய சங்கங்கள் தயாராகி வருகின்றன. லோக்சபா தேர்தல் நேரம் என்பதால், விவசாயிகளிடம் மோதல் போக்கை கடைபிடிக்க வேண்டாம் என, அரசு விரும்புவதாக தெரிகிறது. உ.பி.,யில், ஒரு டன் கரும்புக்கு, 2,850 ரூபாய் அறிவிக்கப்பட்டது. அந்த விலையும் கட்டுப்படியாகாது என, விவசாயிகள் எதிர்ப்பு தெரிவித்தனர். இதையடுத்து, அம்மாநில முதல்வர் அகிலேஷ், "ஒரு டன் கரும்புக்கு ஊக்கத் தொகையாக, 250 ரூபாய் வழங்கப்படும்' என, அறிவித்தார். கர்நாடகாவிலும், 250 ரூபாய் ஊக்கத் தொகை வழங்கப்பட உள்ளது. அதே போன்று, தமிழகத்திலும், இந்த ஆண்டு ஊக்கத்தொகை வழங்கலாமா என, அரசு பரிசீலித்து வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

## டெல்டா மாவட்டங்களில் போலி உரம் ஆய்வு துவக்கம்

சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட போலி உரம் குறித்து, டெல்டா மாவட்டங்களைச் சேர்ந்த வேளாண் துறையினர் ஆய்வு செய்து வருகின்றனர்.

டெல்டா மாவட்டங்களில் சம்பா சாகுபடி தீவிரமாக உள்ளது. ஒரு சில இடங்களில், பயிர் கருகல், செந்நிறமாக மாறுதல் உள்ளிட்ட பிரச்னைகளை விவசாயிகள் சந்தித்து வருகின்றனர். உரத்தைப் பயன்படுத்திய விவசாயிகளுக்கு கை எரிச்சலும் ஏற்பட்டுள்ளது. இந்த சூழ்நிலையில், சீனாவில் இருந்து புதுச்சேரி மாநிலம், காரைக்கால் துறைமுகம் வழியாக வந்து டெல்டா மாவட்டங்களில் வினியோகிக்கப்பட்ட, 10 ஆயிரம் டன் போலி உரம் குறித்த தகவல் வெளியானது. எனவே, போலி உர விவகாரம் குறித்து மிகப்பெரிய அளவில் போராட்டம் நடத்த, டெல்டா மாவட்ட விவசாய சங்கங்கள் தயாராகி வருகின்றன. இதை சமாளிக்க, போலி உரத்தைக் கண்டறியும் ஆய்வை, டெல்டா மாவட்ட வேளாண் துறையினர் தற்போது துவங்கியுள்ளனர்.

இதுகுறித்து, வேளாண் துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது: சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட உரங்களில், குறிப்பிட்ட நிறுவனத்தின் உரம் தான் போலி என்ற தகவல் கிடைத்துள்ளது. அதனால், "அந்த உரத்தை மட்டும் பயன்படுத்த வேண்டாம்' என, விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளோம்.

மற்ற உரங்களின் தரத்தை கண்டறியும் ஆய்வை துவங்கி உள்ளோம். இதற்காக, தனியார் கடைகளில் இருந்து உர மாதிரிகளை எடுத்து, மாவட்ட உர பரிசோதனை மையங்களுக்கு அனுப்பியுள்ளோம். போலி உரம் விற்றது அம்பலமானால், தனியார் நிறுவனங்களின் அங்கீகாரம் ரத்தாகும். எனவே, அதில் இருந்து தப்பிக்க, பல நடவடிக்கைகளை அவர்கள் எடுப்பர். அதனால், ஒரு மாவட்டத்தில் எடுக்கப்பட்ட மாதிரி, மற்றொரு மாவட்ட பரிசோதனை மையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது; ரகசிய குறியீடுகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. டெல்டா மாவட்டங்களில் போலி உரம் பயன்பாட்டில் உள்ளதா என்பது, இந்த ஆய்விற்கு பிறகே தெரிய வரும். இவ்வாறு, அவர் கூறினார்.

## கரை ஒதுங்கிய அபூர்வ ஆமை

ராமேஸ்வரம்: தனுஷ்கோடி கடலில் 6 நாள்களுக்கு முன்பு, மீன்பிடித்த ராமேஸ்வரம் விசைப்படகு மீனவர் வலையில், அபூர்வ அலுங்காமை சிக்கியது. இறைச்சிக்காக கரைக்கு கொண்டு வந்தனர். வனத்துறை நடவடிக்கைக்கு பயந்து, இறந்த ஆமையை கடலில் வீசினர். அழுகிய நிலையில் வேர்க்கோடு கடற்கரையில் ஆமை ஒதுங்கியது. வனத்துறைக்கு மீனவர்கள் தகவல் கொடுத்தும், நேற்று மாலை மீட்கப்படாமல் இருந்தது. ""அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும்," என வனத்துறையினர் தெரிவித்தனர்.

## வைகையில் பாசனத்திற்கு தண்ணீர் திறப்பு

ஆண்டிபட்டி: மதுரை, திண்டுக்கல் மாவட்டங்களின் பாசனத் தேவைக்காக, வைகை அணையில், 17 நாட்களுக்குப் பின், நேற்று, மீண்டும் தண்ணீர் திறக்கப்பட்டது.

வைகை அணை நீர் பிடிப்பு பகுதிகளில், இந்த ஆண்டு, தென் மேற்கு, வடகிழக்கு பருவ மழை எதிர்பார்த்த அளவு பெய்யவில்லை. பெரியாறு அணையில் திறக்கப்பட்ட நீர், வைகை அணையில் தேக்கப்பட்டு வந்தது. அணை நீர் மட்டம்,60 அடியாக உயர்ந்த போது, மதுரை, திண்டுக்கல் மாவட்டங்களின் பாசனத்திற்காக, செப்., 25ல், தண்ணீர் திறந்து விடப்பட்டது. பருவ மழை பொய்த்துப் போனதால், அணைக்கான நீர் வரத்து எதிர்பார்த்த அளவில் இல்லை.

இதனால்,நீர் மட்டம் தொடர்ந்து குறைந்து வந்தது. இதைத் தொடர்ந்து, முறைப்பாசனம் நடைமுறைப்படுத்தப்பட்டது. மழைக்கான சூழல் மாறி, அணைக்கான நீர் வரத்தும் குறைந்தது. டிச., 6ல், அணை நீர் மட்டம் 44 அடியாக குறைந்ததால், பாசனத்திற்கு திறக்கப்பட்ட நீர் நிறுத்தப்பட்டது. இந்நிலையில், நேற்று, மதுரை மாவட்டம், மேலூர் பகுதியில் கருகி வரும் நெற்பயிர்களை காப்பாற்ற, வைகை அணையில் இருந்து, தண்ணீர் திறக்க வலியுறுத்தி, விவசாயிகள் போராட்டம் நடத்தினர். இதையடுத்து, நேற்று காலை, வைகை அணையில் இருந்து, வினாடிக்கு, 1600 கன அடி வீதம் மதுரை, திண்டுக்கல் மாவட்டங்களின் பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்பட்டது. மதுரை, ஆண்டிபட்டி-சேடபட்டி குடிநீருக்காக, வினாடிக்கு, 60 கன அடி வீதம் வழக்கம்போல் வெளியேறுகிறது. நேற்று காலை, அணை நீர் மட்டம், 45.28 அடியாகவும், நீர் வரத்து வினாடிக்கு, 120 கன அடியாகவும் இருந்தது. இருப்பில் உள்ள நீரை, பாசனத்திற்கு, ஒரு சில நாட்கள் மட்டுமே திறக்கும் வாய்ப்புள்ளதாக பொதுப்பணித்துறையினர் தெரிவித்தனர். அணையில் திறக்கப்பட்ட நீர், வைகை அணை நுண்புனல் மின் நிலையம் வழியாக வெளியேறுகிறது. இதன் மூலம், நாள் ஒன்றுக்கு, 144 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது.

**கரும்பு விவசாயி ஊக்கத்தொகை? தமிழக அரசு திடீர் பரிசீலனை**

கரும்பு கொள்முதல் விலை உயர்வுக்கு, விவசாயிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வரும் நிலையில், அதை சமாளிக்க, ஊக்கத்தொகை வழங்குவது குறித்து, அரசு பரிசீலித்து வருவதாக தெரிகிறது.

ஆண்டுதோறும், சர்க்கரை பருவம் துவங்கும் போது, மத்திய, மாநில அரசுகள், கரும்புக்கான கொள்முதல் விலையை நிர்ணயம் செய்கின்றன. இந்த ஆண்டு மத்திய அரசு சார்பில், டன்னுக்கு 2,100 ரூபாய் அறிவிக்கப்பட்டுள்ளது. மாநில அரசு, அதனுடன், 550 ரூபாய் சேர்த்து, டன்னுக்கு 2,650 ரூபாயை, கொள்முதல் விலையாக அறிவித்துள்ளது.

இரண்டு ஆண்டுகளாக, மத்திய அரசை விட, 650 ரூபாய் கூடுதலாக அறிவித்த, மாநில அரசு, இந்த ஆண்டு, 100 ரூபாய் குறைத்துள்ளது.

சர்க்கரை ஆலை நிர்வாகங்களின் நெருக்கடி தான், இதற்கு காரணம் என, விவசாய

சங்கங்களின் நிர்வாகிகள் புகார் கூறி வருகின்றனர். தற்போதுள்ள நிலையில், 'டன் கரும்புக்கு, 3,500 ரூபாய் வழங்க வேண்டும்' என, அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். விரைவில் மிகப்பெரிய போராட்டம் நடத்த விவசாய சங்கங்கள் தயாராகி வருகின்றன.
லோக்சபா தேர்தல் நேரம் என்பதால், விவசாயிகளிடம் மோதல் போக்கை கடைபிடிக்க வேண்டாம் என, அரசு விரும்புவதாக தெரிகிறது.
உ.பி.,யில், ஒரு டன் கரும்புக்கு, 2,850 ரூபாய் அறிவிக்கப்பட்டது. அந்த விலையும் கட்டுப்படியாகாது என, விவசாயிகள் எதிர்ப்பு தெரிவித்தனர். இதையடுத்து, அம்மாநில முதல்வர் அகிலேஷ், 'ஒரு டன் கரும்புக்கு ஊக்கத் தொகையாக, 250 ரூபாய் வழங்கப்படும்' என, அறிவித்தார். கர்நாடகாவிலும், 250 ரூபாய் ஊக்கத் தொகை வழங்கப்பட உள்ளது.
அதே போன்று, தமிழகத்திலும், இந்த ஆண்டு ஊக்கத்தொகை வழங்கலாமா என, அரசு பரிசீலித்து வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

**வெங்காயம் ஏற்றுமதிக்கான விலையை நீக்குக’**

புதுடில்லி:"வெங்காயத்திற்கான குறைந்தபட்ச ஏற்றுமதி விலையை, அடியோடு நீக்க வேண்டும்," என, மத்திய வேளாண் அமைச்சர் சரத்பவார், மத்திய வர்த்தக அமைச்சகத்திற்கு கடிதம் எழுதி உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.மகாராஷ்டிரா:கடந்த சில மாதங்களில், வெங்காயம் விலை, கிலோ, 80–100 வரை உயர்ந்தது. இதையடுத்து,உள்நாட்டில் வெங்காயம்விலையை கட்டுக்குள் கொண்டு வரும் நோக்கில், அதன் மீதான குறைந்தபட்ச ஏற்றுமதி விலை, படிப்படியாக உயர்த்தப்பட்டது.
கடந்த நவம்பர் நிலவரப்படி, ஒரு டன் வெங்காயத்தின் குறைந்தபட்ச ஏற்றுமதி விலை, 1,150 டாலராக உயர்த்தப்பட்டது.இந்நிலையில், குஜராத், மகாராஷ்டிரா, ராஜஸ்தான், மத்திய பிரதேசம் ஆகிய மாநிலங்களில் உற்பத்தியான வெங்காயம், சந்தைக்கு வரத் துவங்கியது.இதையடுத்து, ஒரு கிலோ வெங்காயத்தின் விலை, 35–50 என்ற அளவிற்கு குறைந்தது. இது, நடப்பு டிசம்பர் இரண்டாவது வாரத்தில், கடுமையாக வீழ்ச்சி கண்டது.போராட்டம்:இதையடுத்து, விவசாயிகள், வெங்காயத்திற்கான குறைந்தபட்ச ஏற்றுமதி விலையை குறைக்க வேண்டும் என,

போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதைத் தொடர்ந்து, ஒருடன் வெங்காயத்தின் குறைந்தபட்ச ஏற்றுமதிவிலை, 1,150 லிருந்து, 800 டாலராக குறைக்கப்பட்டது.இந்நிலையில், கடந்த வாரம், லசன்கான் மொத்த விற்பனை சந்தையில், ஒரு கிலோ வெங்காயம், 10 ரூபாய்க்கும் கீழ் குறைந்தது.இதையடுத்து, மீண்டும் வெங்காயத்தின் ஏற்றுமதி விலை குறைக்கப்பட்டு, 350 டாலராக நிர்ணயிக்கப் பட்டது. தற்போது, சில்லரை விற்பனையில், ஒரு கிலோ வெங்காயத்தின் விலை, 18–25 ரூபாய் என்ற அளவிற்கு குறைந்துள்ளது. இது வரும் நாட்களில் மேலும் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.இதனால், விவசாயிகள் பாதிக்கப்படுவதை தடுக்கும் நோக்குடன், வெங்காயத்திற்கான குறைந்தபட்ச ஏற்றுமதி விலையை அடியோடு நீக்க வேண்டும் என, சரத்பவார் கேட்டுக் கொண்டுள்ளதாக, அரசு அதிகாரிகள் தெரிவித்தனர்.விலை நிர்ணயம்:வெளிநாடுகளுக்கு வெங்காயம் அனுப்ப, குறைந்தபட்ச விலை நிர்ணயிக்கப்பட்டதால், அதன் ஏற்றுமதி சரிவுஅடைந்துள்ளது. கடந்த ஏப்ரல் முதல் நவம்பர் வரையிலான காலத்தில், வெங்காயம் ஏற்றுமதி, 8.53 லட்சம் டன்னாக குறைந்தது. இது, சென்ற ஆண்டு, இதே காலத்தில், 18.22 லட்சம் டன்னாக மிகவும் அதிகரித்து காணப்பட்டது.

**இயற்கை ரப்பர் மீதான இறக்குமதி வரி குறைப்பு**



புதுடில்லி:மத்திய அரசு, உள்நாட்டு விவசாயிகளின் நலன் கருதி, இறக்குமதி செய்யப்படும் இயற்கை ரப்பர் மீதான சுங்க வரியை, 20 சதவீதம் அல்லது 1 கிலோவுக்கு, 30 ரூபாய் என்ற அளவில் உயர்த்தியுள்ளது. இதில், எது குறைவோ அதனை இறக்குமதி வரியாக செலுத்தலாம் என, மத்திய நிதி அமைச்சகத்தின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.அமலுக்கு வருகிறதுதற்போது, இறக்குமதி செய்யப்படும் ரப்பர் மீது, 20 சதவீதம் அல்லது கிலோவுக்கு, 20 ரூபாய் என்ற அளவில் வரி விதிக்கப்படுகிறது.

இதனடிப்படையில் இறக்குமதி செய்யப்படும், ஒரு கிலோ ரப்பரின் விலை, 160 ரூபாய் என்ற அளவில் வருகிறது.வரும், வெள்ளிக்கிழமை முதல் புதிய வரி விகிதம் அமலுக்கு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.கேரளாவைச் சேர்ந்த பார்லிமென்ட் உறுப்பினர்கள், இறக்குமதி செய்யப்படும் ரப்பரால், உள்நாட்டு விவசாயிகள் கடு-மையாக பாதிக்கப்படுகின்றனர் என்று தெரிவித்தனர்.உள்நாட்டில் உற்பத்தி குறைந்துள்ள நிலையில், தற்போது, ஒரு கிலோ ரப்பரின் விலை, 158 ரூபாய் என்ற அளவில் உள்ளது. இது, கடந்த ஆகஸ்ட் மாதத்தில், 196 ரூபாயாக இருந்தது.உள்-நாட்டு விலையை விட, சர்வதேச சந்தையில் இயற்கை ரப்பர் விலை குறைவாக உள்ளதால், ரப்பர் அதிகளவில் இறக்குமதி செய்யப்படுகிறது.சென்ற நவம்பர் மாதம் வரையிலுமாக, 2.38 லட்சம் டன் ரப்பர் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. நடப்பு முழு நிதியாண்டில், இதன் இறக்குமதி, 3 லட்சம் டன்னாக அதிகரிக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது.வரவேற்பு:கடந்த நிதியாண்டில் இயற்கை ரப்பர் இறக்குமதி, 2.17 லட்சம் டன் என்ற அளவில்தான் இருந்தது.

மத்திய அரசு, ரப்பர் மீதான இறக்குமதி வரியை உயர்த்தி உள்ளதற்கு, கேரளாவில் பல்வேறு அமைப்புகள் வரவேற்பு தெரிவித்துள்ளன. இதனால், இயற்கை ரப்பர் உற்பத்தியில் ஈடுபட்டு வரும், 11 லட்சம் விவசாயிகளுக்கு நிவாரணம் ஏற்-படும்.இருப்பினும், மத்திய அரசு, ரப்பர் மீதான இறக்குமதி வரியை, 20 சதவீதம் அல்லது கிலோவுக்கு, 30 ரூபாய், இதில் எது, அதிகமோ அதற்கேற்ப வரி செலுத்த வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தால் அது, மேலும் பயனளிப்பதாக இருக்கும் என, விவசாயிகள் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.டயர் தயாரிப்பு நிறுவனங்கள்:இருப்பினும், ரப்பர் மீதான இறக்குமதி அதிகரிப்பால், இந்திய டயர் தயாரிப்பு நிறுவனங்களுக்கு, எவ்வித பாதிப்பும் ஏற்படாது என, கூறப்படுகிறது. ஏனெனில், இந்நிறுவனங்களுக்கு, ஏற்றுமதியின் அடிப்படையில், முன்கூட்டிய உரிமத்தின் பேரில், இயற்கை ரப்பரை எவ்வித வரியும் இல்லாமல் இறக்குமதி செய்து கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

**விவசாயிகளுக்கு கால்நடை துறை அறிவுரை**

காஞ்சிபுரம்:பனிக்காலத்தில் கால்நடைகளை தாக்கும் நோயை தடுக்கும் வகையில், வெயிலுக்குப் பின், ஆடு, மாடுகளை மேய்ச்சலுக்கு ஓட்டிச் செல்ல வேண்டும் என, கால்நடைத் துறை உதவி இயக்குனர் ராஜன்சி ஆண்டனி தெரிவித்துள்ளார்.

அவர் கூறியதாவது:

மார்கழி மற்றும் தை, மாசி ஆகிய மாதங்களில், பனிப்பொழிவு அதிக அளவில் காணப்படும். இந்த காலை நேரங்களில் ஆடு, மாடுகளை மேய்ச்சலுக்கு ஓட்டிச் சென்றால், பனிப்புல்லை உட்கொள்வதன் மூலமாக, ஆடுகளுக்கு துள்ளுமாறி நோயும், மாடுகளுக்கு தொண்டை அடைப்பான் நோயும் தாக்கலாம்.

இந்த நோய் ஏற்படாமல் தடுக்கும் வகையில், ஆடு மற்றும் மாடுகளை நன்கு வெயில் வந்த பின்னரே மேய்ச்சலுக்கு ஓட்டிச் செல்ல வேண்டும். இதன் மூலம் ஆடு, மாடுகளுக்கு நோய் தாக்கம் ஏற்படாதவாறு பாதுகாத்துக் கொள்ளலாம்.

இவ்வாறு, அவர் தெரிவித்தார்.

**விவசாயிகளுக்கு வேளாண் குறுஞ்செய்தி**

காஞ்சிபுரம்:விவசாயிகள் பயிரிடும் பயிர் வகைகளுக்கு ஏற்றவாறு, தடுப்பு மருந்துகளை தெளிக்கவும், உரமிடுவதற்கும் தமிழில் குறுந்தகவல் மூலம் அறிவுரை வழங்க, வேளாண் துறை முடிவு செய்துள்ளது.

காஞ்சிபுரம் மாவட்டத்தில், 1.2 லட்சம் ஹெக்டேர் பரப்பில், 38,000க்கும் மேற்பட்ட விவசாயிகள் நெல், சிறு தானியம் மற்றும் பயறு வகை பயிர்களை, பயிரிட்டு வருகின்றனர்.

பருவ நிலையில் அடிக்கடி மாற்றம் ஏற்படுகிறது. இதற்கு ஏற்றவாறு, உர நிர்வாகம் மற்றும் பூச்சி மருந்து தெளிப்பு முறைகள் குறித்து, விவசாயிகளுக்கு தமிழில் குறுஞ்செய்தி அனுப்புவதற்கு, வேளாண் துறை முடிவு செய்துள்ளது.

அந்தந்த வட்டார வேளாண்மை உதவி இயக்குனர்கள் அலுவலகம் மூலம் விவசாயிகளுக்கு, குறுஞ்செய்தி அனுப்புவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என, இணை இயக்குனர் சவுந்திரராஜன் தெரிவித்துள்ளார்.

**மிளகாய் பயிரிடுவதில் ஆர்வம் விலை குறைய வாய்ப்பு**

திருத்தணி:மிளகாய் செடிகளில், மகசூல் அதிகளவில் கிடைப்பதால், திருத்தணி பகுதிகளில், விவசாயிகள், மிளகாய் செடியை அதிக அளவில், பயிரிட்டு உள்ளனர். திருத்தணி ஒன்றியத்தில், பெரும்பாலான விவசாயிகள், நெல், வேர்க்கடலை, கரும்பு மற்றும் சவுக்கு போன்ற பயிர்கள் செய்கின்றனர். சில விவசாயிகள் மட்டும், மிளகாய் போன்ற தோட்டப் பயிர்கள் பயிரிடுகின்றனர்.

தற்போது, மிளகாய் பயிரில், மகசூல் அதிகளவில் கிடைப்பதால், 3,000க்கும் மேற்பட்ட விவசாயிகள் மிளகாய் செடிகள் நட்டு பராமரிக்கின்றனர்.

இதுகுறித்து, தோட்டக்கலை துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது:

அக்டோபர் - நவம்பர் மாதத்தில் மிளகாய் விதைகள் விதைப்பதற்கு தகுந்த காலம். செடிகள் நட்டு, 30 - 40 நாட்களில் காய்கள் காய்க்கும். விதைகளை நேரடியாக நிலத்தில் விதைத்தால், நான்கு முறை மிளகாய்கள் பறிக்க முடியும். செடிகள், பறித்து நடும் போது, எட்டு முறை மிளகாய் பறிக்கலாம். ஒரு ஏக்கருக்கு, 15 ஆயிரம் ரூபாய் வரை செலவாகும். மகசூல், ஒரு ஏக்கருக்கு 12 டன் வரை கிடைக்கும். தற்போது உலர்ந்த மிளகாய், கிலோ, 120 ரூபாய் வரை விற்பனையாகிறது. பச்சை மிளகாய் கிலோ, 40 ரூபாய் வரை விற்கிறது.

இதனால், விவசாயிகள், அதிகளவில் மிளகாய் நாற்றுவிட்டு நடுகின்றனர். அடுத்த மாதம் முதல் வாரத்தில் இருந்து மிளகாய் வரத்து அதிகரிக்கும் என்பதால் விலை குறைவதற்கு வாய்ப்புகள் உள்ளன.இவ்வாறு அவர் கூறினார்.

**கால்நடைத் துறை சிகிச்சை பலனின்றி ஆந்த்ராக்ஸ் பாதித்த ஆடுகள் இறப்பு**

திண்டிவனம்:நொளம்பூரில் கால்நடை துறை சிகிச்சை

அளித்தும் ஆந்த்ராக்ஸ் நோயால் கால்நடைகள் இறப்பு அதிகரிப்பதால், மக்கள் கவலை அடைந்துள்ளனர். திண்டிவனம் அடுத்த நொளம்பூர் கிராமத்தில் உள்ள கால்நடைகள் சில மாதங்களாக ஆந்த்ராக்ஸ் நோயால் பாதிக்கப்பட்டுள்ளன. இதில், கடந்த 18ம் தேதி மட்டும் பதினைந்திற்கும் மேற்பட்ட ஆடுகள் இறந்தன. கால்நடை துறை அதிகாரிகள் கடந்த இரு தினங்களுக்கு முன் அந்த கிராமத்தில் முகாமிட்டு, கால்நடைகளுக்கு சிகிச்சை அளித்தனர். இருந்தும், நேற்று எல்லம்மாள் என்பவருக்கு சொந்தமான ஆடு ஒன்று இறந்தது.

கால்நடைத் துறை அதிகாரிகள் கால்நடைகள் இறக்கும் தினங்களில் மட்டுமே சம்மந்தப்பட்ட கிராமங்களில் சிகிச்சை அளிக்கின்றனர். பின்னர், அந்த கிராமத்தை கண்காணிப்பதில் அலட்சியம் காட்டி வருகின்றனர். ஆந்த்ராக்ஸ் நோய் பாதித்துள்ள கிராமங்களில் தொடர் கண்காணிப்பில் ஈடுபட கால்நடை துறை அதிகாரிகள் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**செம்மை நெல் சாகுபடியில் மக‹ல்...அமோகம்! கச்சிராயபாளையம் விவசாயிகள் ஆர்வம்**

கச்சிராயபாளையம்:கச்சிராயபாளையம் பகுதியில் செம்மை நெல் சாகுபடியில் விவசாயிகள் அதிக ஆர்வம் செலுத்தி வருகின்றனர்.

கச்சிராயபாளையம் பகுதியில் கல்வராயன்மலையை ஒட்டி கோமுகி அணை இருப்பதால் விவசாயம் பிரதான தொழிலாக உள்ளது. விவசாயிகள் புதிய தொழில் நுட்பமான செம்மை நெல் சாகுபடியில் அதிகள வில் ஆர்வம் காட்டி வருகின்றனர். செம்மை நெல் சாகுபடியினை எஸ்.ஆர்.ஐ., முறை என்றும் இம்முறை ஆப்ரிக்காவில் உள்ள மடகாஸ்கர் என்ற இடத்தில் கண்டு பிடிக்கப்பட்டதால் மடகாஸ்கர் முறை என்றும் அழைக்கப்படுகிறது. ரகங்கள் ஏடி.டி.டி., 38, 39 போன்ற ரகங்களும் ஒட்டு ரகங்களும் அதிக தூர்கள் பிடித்து வளரும் அனைத்து நெல் ரகங்களும் செம்மை நெல் சாகுபடிக்கு ஏற்றது. ஏக்கருக்கு 2-3 கிலோ சான்றுகள் பெறப்பட்ட விதையே போதுமானது. இம்முறை பயிர் செய்ய பருவ மழை இல்லாத வறட்சி பருவம் மிகவும் ஏற்றது. பாய் நாற்றங்கால் செம்மை நெல் சாகுபடியில் பாய்நாற்றங்கால் முறையில் நாற்று தயார் செய்யப்படுகிறது. இந்த சாகுபடி முறையில் 90 சதவீத விதைகள் சேமிக்கப்படுகிறது. விதைகளின் செலவு குறைகிறது. ஒரு ஏக்கர் நாற்றுக்கு 1 செண்ட் (40 சதுர மீட்டர்) இடத்தில் 1 மீட்டர் அகலம், 5 மீட்டர் நீளத்திற்கு 8 மேடைகள் அமைக்கப்படுகிறது. நாற்று மேடையினை பாலீத்தீன் சீட் விரித்து 2 செ.மீ., உயரத்திற்கு தொழு மண் இட்டு 375 கிராம் நெல் வீதம் நாற்று விடப்படுகிறது. விதை நேர்த்தி செய்ய 3 கிலோ விதைக்கு 30 கிராம் சூடாமோனாஸ் அல்லது 200 கிராம் அசோபாஸ் உயிர் உரம், அரிசி கஞ்சி அல்லது தண்ணீரில் கரைத்து, அதில் விதையினை ஊரவைத்து நிழலில் உலர்த்தி பின் நாற்று விட வேண்டும். நாற்று வளர்ச்சி குறைவாக

இருந்தால் 10 லிட்டர் தண்ணீரில் 50 கிராம் யூரியா கலந்து பூவாலி கொண்டு தெளிக்கப்படுகிறது. அடி உரம் நன்கு சமன் செய்யப்பட்ட வயலில் 33 கிலோ டி.ஏ.பி., 7 கிலோ பொட்டாஷ் ஆகியவை அடி உரமாக இட வேண்டும். நடவுமுறை இதற்காக 14-15 நாட்கள் ஆன நாற்றினை 25க்கு 25 செ.மீ., இடைவெளியில் சதுர வடிவில் நடவு செய்யப்படுகிறது. நாற்றின் வேர்கள் மேலே தெரியாமல் அதிக ஆழம் இல்லாமலும் ஒரு குத்துக்கு ஒரு நாற்று வீதம் நடப்படுகிறது. நடவுக்கு அடையாள கருவி அல்லது அடையாளமிட்ட கயிறு போன்றவை பயன்படுத்தப்படுகிறது. இதில் அதிகளவு இடைவெளி இருப்பதால் பயிறுக்கு தேவையான காற்றோட்டமும், சூரியஒளியும் கிடைப்பதால் நெற்பயிர் அதிக தூர்கள் பிடித்து செழித்து வளருகிறது. நடவு செய்த 10, 20, 30 மற்றும் 40 நாட்களில் களைக்கருவியை கொண்டு குறுக்கும் நெடுக்குமாக உருட்டப்படுவதால், மண் கிளரப்பட்டு வேர்கள் மண்ணில் ஊன்றி வளர ஏதுவாகிறது. தழைச்சத்து மேலாண்மை

மேலுரமாக அளிக்கப்படும் தழைச்சத்துக்கள் இலை வண்ண அட்டை மூலம் பயிரில் வளர்ந்து வரும் இலையை 3வது இலையுடன் ஒப்பிட்டு அதற்கேற்ற அளவில் மட்டுமே உரங்கள் பயன்படுத்தப் படுகிறது. இதனால் தேவையற்ற உர செலவினங்கள் குறைகிறது. செம்மை சாகுபடி பயன்கள் சாதாரண முறையில் பயிரில் 10-15 சிம்புகள் மட்டுமே வளருகிறது. செம்மை சாகுபடியில் 60-70 சிம்புகள் தோன்றுகின்றது. அதிக இடைவெளி இருப்பதால் பூச்சி மற்றும் நோய் தாக்குதல் குறைகிறது. இலைகள் அறுவடை வரை பசுமையாக இருப்பதால் சூரிய ஒளிச்சேர்க்கை கடைசி வரை நடைபெற்று பயிர்கள் செழித்து வளருகிறது. இதனால் சாதாரண முறையைவிட ஏக்கர் ஒன்றிற்கு 500 முதல்1000 கிலோ நெல் (16-18 மூட்டைகள்) கூடுதலாக மகசூல் கிடைக்கிறது. செம்மை நெல் சாகுபடியில் அதிக மகசூல் பெறுவதால் கச்சிராய பாளையம் விவசாயிகள் அதிக அளவில், இந்த சாகுபடி முறையில் மிகுந்த ஆர்வம் செலுத்தி வருகின்றனர்.

### பால் விலை உயர்வு முதல்வருக்கு நன்றி

விழுப்புரம்:பால் விலையை உயர்த்தி உத்தரவிட்ட, முதல்வர் ஜெ.,விற்கு நன்றி தெரிவித்து, விழுப்புரம் ஆவின் நிறுவனத்தில் நேற்று இனிப்பு வழங்கப்பட்டது. தமிழக முதல்வர் ஜெ., பால் கொள்முதல் விலையை லிட்டருக்கு 3 ரூபாய் உயர்த்தி நேற்று உத்தரவிட்டுள்ளார். அதன்படி பசும் பால் லிட்டர் 20 ரூபாயிலிருந்து 23 ரூபாயாகவும், எருமைப் பால் லிட்டர் 28 ரூபாயிலிருந்து, 31 ரூபாயாகவும் விலை உயர்த்தப்பட்டுள்ளது.

இதற்கு நன்றி தெரிவித்து விழுப்புரம் ஆவின் நிறுவனம் எதிரே, நேற்று பட்டாசு வெடித்து, இனிப்பு வழங்கப்பட்டது. விழுப்புரம்-கடலூர் மாவட்ட ஆவின் சேர்மன் விஜயகுமார் தலைமை தாங்கினார். துணைத் தலைவர் செல்வராஜ், கோலியனூர் ஒன்றிய அ.தி.மு.க., செயலாளர் முருகன், ஆவின் பொது மேலாளர் சுந்தரேசன், துணைப் பதிவாளர்கள் ராஜா, பாலசுந்தரம் மற்றும் உதவி பொது மேலாளர் நடராஜன், இயக்குனர்கள் தவமணி, கண்ணன், கமலம், சுலோச்சனா, கூட்டுறவு சங்கத் தலைவர் கலியமூர்த்தி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### கரும்பு விவசாயிகள் கண்டனம்

வானூர்:தமிழ்நாடு கரும்பு உற்பத்தியாளர்கள் ஒருங்கிணைப்பு கூட்டமைப்பு சார்பில்,புதுச்சேரி லிங்காரெட்டிபாளையம் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிர்வாகத்தை கண்டித்து தீர்மானம் நிறைவேற்றினர்.

தமிழ்நாடு கரும்பு உற்பத்தியாளர்கள் ஒருங் கிணைப்பு கூட்டமைப்பு துவக்க விழா வானூர் லட்சுமி திருமண மண்டபத்தில் நடந்தது. தனுசு தலைமை தாங்கினார். தங்கராசு முன்னிலை வகித்தார். முனுசாமி வரவேற்றார்.

அ.தி.மு.க., ஒன்றிய செயலாளர் பக்தவச்சலம் சிறப்புரை ஆற்றினார். நிர்வாகிகள் தண்டபாணி, வாசு, கந்தசாமி ஆகியோர் பேசினர்.

கூட்டத்தில், 2013-14ம் ஆண்டிற்கு கரும்புக்கு விலை நிர்ணயம் செய்து அறிவித்த தமிழக முதல்வர் ஜெ., விற்கு நன்றி தெரிவித்தனர். 2012-13ம் ஆண்டு அறவை பருவத்திற்கு வெட்டி அனுப்பிய கரும்புக்கு விலையை நிர்ணயம் செய்ய வேண்டும், சர்க்கரை ஆலைக்கு விவசாயிகளை இயக்குனர்களாக சேர்க்க வேண்டும். 2011-12, 12-13ம் ஆண்டு வங்கியில் வாங்கிய கரும்பு பயிர் கடனுக்கான வட்டியை ஆலை

நிர்வாகம் செலுத்த வேண்டும்.
தமிழக விவசாய சங்க பிரதிநிதிகள் அடங்கிய முத்தரப்பு கூட்டத்தை கூட்டி விலை நிர்ணயம் செய்ய வேண்டும். வரும் காலங்களில் வெட்டி அனுப்பும் கரும்புக்கு வண்டி வாடகை வழங்க வேண்டும். பங்கு தொகை விவரங்களை அறிவிப்பு பலகையில் வெளியிட வேண்டும். விவசாயிகளுக்கு சமுதாய கூடம் கட்டிதர வேண்டும். ஒவ்வொரு ஆண்டும் விவசாயிகள் பொதுக் குழுவை கூட்டி ஆலை நிர்வாக ஆண்டு வரவு-செலவு கணக்கை சமர்ப்பிக்க வேண்டும். அனைத்து சலுகைகளையும் தமிழக அரசு விவசாயிகளுக்கும் வழங்க வேண்டும்.
ஏக்கருக்கு அதிக மகசூல் தரும் விவசாயிகளை ஊக்குவிக்க, ஊக்க பரிசு தொகை வழங்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஹரிகரன் நன்றி கூறினார்.

பால் விலை உயர்த்த கோரி விவசாயிகள் ஆர்ப்பாட்டம்

தர்மபுரி: தர்மபுரி கலெக்டர் அலுவலகம் முன், தமிழக விவசாயிகள் சங்கம் சார்பில், கரும்பு மற்றும் பால் விலையை உயர்த்தக்கோரி ஆர்ப்பாட்டம் நடந்தது.
மாநில தலைவர் சின்னசாமி தலைமை வகித்தார். தமிழக விவசாயிகள் சங்கம் மாவட்ட தலைவர் செங்கோடன், மாவட்ட செயலாளர் சக்திவேல், குப்புசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.
பொருளாளர் பழனி வரவேற்றார். கரும்புக்கு வெட்டுக்கூலியை ஆலையே ஏற்றுக்கொண்டு, ஒரு டன் கரும்புக்கு, 4,000 ரூபாய் வழங்க வேண்டும். பால் கொள்முதல் விலையை, பசும்பால் லிட்டருக்கு, 25 ரூபாயும், எருமைப்பால் லிட்டருக்கு, 35 ரூபாயும் உயர்த்த வேண்டும். கோமாரி நோய் தாக்கி இறந்த கால்நடைகளுக்கு, தலா, 25 ஆயிரம் ரூபாய் நிவாரணம் வழங்க வேண்டும். கடும் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளிடம் இருந்து, நிலுவை வங்கி கடனுக்காக டிராக்டர் மற்றும் உழவு சார்ந்த கருவிகளை பறிமுதல் செய்யும் நடவடிக்கையை வங்கிகள் கைவிட வேண்டும். பறிமுதல் செய்யப்பட்ட வாகனங்களை, விவசாயிகளிடமே திரும்பி வழங்க வேண்டும்.
யானை, காட்டுப்பன்றி போன்ற வனஉயிர்களால், விவசாயிகளின் உயிர், பயிர்களை காக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். காட்டுப்பன்றியை வன

உயிர்கள் பட்டியலில் இருந்து நீக்க வேண்டும். தேசிய வேளாண் பயிர் காப்பீட்டு திட்டத்தில், தனிநபர் பயிர் காப்பீடு கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அதுவரை விவசாயிகளை, பயிர் காப்பீடு செய்ய கட்டாயப்படுத்தக்கூடாது, உள்ளிட்ட பல்வேறு கோரிக்கையை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடந்தது.மாநில பொதுசெயலாளர் சுந்தரம், பொருளாளர் வேலுமணி, துணை தலைவர் ஆறுமுகம் உள்பட பலர் பங்கேற்றனர்.

**பனியால் குறைந்தது தக்காளி வரத்து:விலை உயர்வால் விவசாயிகள் மகிழ்ச்சி**

தர்மபுரி: தர்மபுரியில், தக்காளியின் வரத்து குறைந்ததால், விலை உயர்ந்துள்ளது. தமிழக அளவில், தக்காளி உற்பத்தியில், தர்மபுரி மாவட்டம் முக்கிய பங்கு வகிக்கிறது. மாவட்டம் முழுவதும் தக்காளி மானாவாரியாகவும், பாசன வசதியிலும், 20 ஆயிரம் ஏக்கருக்கு மேல் சாகுபடி செய்யப்படுகிறது. காரிமங்கலம், பென்னாகரம், பாலக்கோடு, மாரண்டஹள்ளி போன்ற பகுதிகளில் உற்பத்தியாகும் தக்காளி, பாலக்கோடு தக்காளி மார்க்கெட்டில் இருந்து, தர்மபுரி, சென்னை, கோவை, ஈரோடு, சேலம், திண்டுக்கல், நெல்லை, கேரளா போன்ற பகுதிகளுக்கு, அதிகளவில் விற்பனைக்காக அனுப்பப்படுகிறது.

சில மாதத்துக்கு முன், ஒரு கிலோ தக்காளி, 40 ரூபாய் வரை விற்பனையானதால், மாநிலம் முழுவதும் பல்லாயிரக்கணக்கான விவசாயிகள் தக்காளியை சாகுபடி செய்தனர். இதனால், தக்காளி வரத்து அதிகரித்ததால், ஒரு கிலோ தக்காளி, ஐந்து ரூபாய்க்கு விற்பனையானதால், விவசாயிகள் கவலை அடைந்தனர். பனியின் தாக்கத்தால், மார்க்கெட்டுக்கு வரும் தக்காளியின் வரத்து குறைந்துள்ளது. இதனால், சில தினங்களாக, 15 கிலோ தக்காளி, 150 ரூபாய்க்கு விற்பனையானதால், விவசாயிகள் ஆறுதல் அடைந்துள்ளனர். இதுகுறித்து, பாலக்கோடு தக்காளி விவசாயி மகேந்திரன் கூறியதாவது: தர்மபுரி மாவட்டத்தில், தர்மபுரி, பென்னாகரம், பாலக்கோடு, பாப்பரப்பட்டி, மாரண்டஹள்ளி பகுதிகளில் தக்காளி பயிரிடப்பட்டுள்ளது. பனியின் தாக்கத்தால், தக்காளியின் வரத்து வெகுவாக குறைந்ததால், ஒரு கிலோ தக்காளி, தற்போது பத்து ரூபாய்க்கு விற்பனையாகிறது. தொடர் பனிப்பொழிவால், தக்காளி விலை மேலும் உயரும் என எதிர்பார்க்கிறோம், என்றார்.

**ரோஜா செடிகளில் பூஞ்சாண நோய் :கட்டுப்படுத்த முடியாமல் விவசாயிகள் கவலை**

ஓசூர்: ஓசூர் சுற்றுவட்டார பகுதியில், காதலர் தின ஏற்றுமதியை குறி வைத்து சாகுபடி செய்யப்பட்டுள்ள, ரோஜா செடிகளில் பூஞ்சாண நோய் தாக்கி உள்ளதால், மலர் சாகுபடி பாதிக்கப்பட்டுள்ளது.

ஓசூர் சுற்றுவட்டார பகுதியில் நிலவும் சீதோஷ்ண நிலை, மலர் சாகுபடிக்கு ஏற்றதாக உள்ளது. ஓசூர் பகுதியில், பசுமை குடில்கள் அமைத்து, 50 ஆயிரம் ஹெக்டேருக்கு மேல் ரோஜா சாகுபடி செய்யப்படுகிறது. இங்கு சாகுபடி செய்யப்படும் ரோஜா, இந்தியா மட்டுமன்றி, வெளி நாடுகளுக்கும் அதிக அளவில் ஏற்றுமதி செய்யப்படுகிறது. கடந்த ஆண்டு, இந்த பகுதியில் இருந்து மட்டும் ரோஜா உள்பட பல்வேறு மலர்கள், 320 கோடி ரூபாய்க்கு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது.

ஆண்டு தோறும், ஓசூர் பகுதியில் காதலர் தின விற்பனையை குறி வைத்து ஏராளமான விவசாயிகள் ரோஜா சாகுபடி செய்வர். ரோஜா செடி நடவு செய்த, 50 நாட்களில் மொட்டு விட்டு பூக்கள் பூக்கும். டிசம்பர் முதல் வாரத்தில், காதலர் தின விற்பனையை குறி வைத்து, ஓசூர் சுற்றுவட்டார பகுதியில் உள்ள விவசாயிகள் ரோஜா சாகுபடி செய்தனர்.

ஆனால், சாகுபடி செய்துள்ள ரோஜா செடிகளில், "டவுனி மிலிடி' எனப்படும் பூஞ்சாண நோய் தாக்குதல் அதிக அளவில் ஏற்பட்டுள்ளது. இந்நோய் தாக்கி, ரோஜா மொட்டுகளில், கரும்புள்ளிகள் ஏற்பட்டு, மொட்டுக்கள் கருகியுள்ளன. பூஞ்சாண நோய்தாக்குதலில் பாதிக்கப்பட்ட ரோஜாக்கள், கரும்புள்ளிகளுடன் இருப்பதால், பொதுமக்கள் வாங்க தயங்குவர் என்பதால், விவசாயிகள் கவலையில் உள்ளனர்.

ஓசூரை சேர்ந்த ரோஜா விவசாயி ராமப்பா கூறியதாவது:

ஆண்டுதோறும் ஓசூர் பகுதியில், காதலர் தினத்தை குறி வைத்து, அதிக பரப்பில், ரோஜா சாகுபடி செய்யப்படும். எந்த ஆண்டும் இல்லாத அளவுக்கு, இந்த ஆண்டு, அதிகளவில் பனிப்பொழிவு நிலவி வருகிறது. கடும் பனிப்பொழிவால், ரோஜாப்பூக்களின் வளர்ச்சி தடைபட்டு, பூஞ்சாண நோய் பாதித்துள்ளது.

இந்நோய் காய்கறிகளை மட்டுமே தாக்க கூடியது.

இந்தியாவில், அதிகளவில் ரோஜாவை ஏற்றுமதி செய்யும் ஓசூரில், பூஞ்சாண நோய் தாக்குதலால் ரோஜாவின் வளர்ச்சியும், சாகுபடியும் வேகமாக குறைந்து வருகிறது. இந்நோயை கட்டுப்படுத்த, வேளாண்துறையினர் அறிவுறுத்திய மருந்துகளை தெளித்தும், பூஞ்சாண நோயை கட்டுப்படுத்த முடியவில்லை, என்றார்.

**ஆட்டுசந்தை திறக்க தமிழக முதல்வருக்கு விவசாயிகள் கோரிக்கை**

க.பரமத்தி: கரூர் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் ஆட்டு சந்தையை மீண்டும் நடத்த அனுமதிக்க வேண்டும் என, ஆட்டு வியாபாரிகள் மற்றும் ஆடுவளர்ப்போர் சங்கத்தினர், தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு மனு அனுப்பியுள்ளனர்.

மனுவில் உள்ளதாவது:

கோமாரி நோயை காரணம் காட்டி, கரூர், திருப்பூர், ஈரோடு, திண்டுக்கல், திருச்சி, நாமக்கல், சேலம் ஆகிய மாவட்டங்களில், ஆட்டு சந்தையை நடத்த கூடாது என மாவட்ட கலெக்டர்கள் உத்தரவு போட்டுள்ளனர். இதனால், ஆடுகளை விற்க முடியாமல் தவித்து வருகிறோம். வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. உணவு தேவை மற்றும் குழந்தை களுக்கு பள்ளி கட்டணம் கட்ட முடியாத நிலை உள்ளது. ஆடு வளர்ப்பு தொழி லை தவிர வேறு தொழில் எதுவும் எங்களுக்கு தெரியாது. எனவே, ஆட்டு சந்தையை மீண்டும் திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**புது நெல் கொள்முதல் நிலையம் திறக்க...மெத்தனம்! அறுவடை துவக்கியதால் கடும் அதிருப்தி**

தஞ்சாவூர்: டெல்டாவில் சம்பா அறுவடை துவங்கியும், தேவைக்கேற்ப நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறப்பதில் அதிகாரிகள் மெத்தனம் காட்டுவதால், தனியாருக்கு விற்று நஷ்டத்தை சந்திக்க நேரிடுகிறது. அதனால், புதிய நிலையங்களை உடனே திறக்க அந்தந்த மாவட்ட கலெக்டர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்' என, விவசாயிகள் கோரியுள்ளனர்.

டெல்டாவில் காவிரி நீரை நம்பியே நெல் சாகுபடி நடக்கிறது. வயலில் அறுவடையான நெல் மூட்டையை நேரடியாக விவசாயிகளிடம் பெற, அரசு

சார்பில் நேரடி கொள்முதல் நிலையம் இயங்குகிறது. அறுவடை காலத்தில் தேவைக்கேற்ப நெல் கொள்முதல் நிலையங்களை கலெக்டர் உத்தரவு பெற்று, நுகர்பொருள் வாணிபக்கழக அதிகாரிகள் அவ்வப்போது திறப்பது வழக்கம். இதன்படி தற்போது, நெல் கொள்முதல் நிலையங்கள் தஞ்சையில், 155ம், திருவாரூரில், 252ம், நாகையில், 65ம் இயங்குகிறது. இது போதாது, புதிதாக திறக்க வேண்டும் என, விவசாயிகள் கோரியுள்ளனர்.

தஞ்சை, நாகை, திருவாரூர் உள்பட டெல்டாவில் சம்பா அறுவடையை மும்முரமாக விவசாயிகள் துவக்கியுள்ளனர். ஆனால் போதுமான கொள்முதல் நிலையம் இல்லை. இதனால், நஷ்டத்தை சந்திக்க நேரிடுகிறது. குக்கிராமங்களில் கொள்முதல்நிலையம் திறப்பதில் அதிகாரிகள் மெத்தனம் காட்டுகின்றனர் என, டெல்டா விவசாயிகள் குற்றம்சாட்டுகின்றனர்.

இதுகுறித்து தஞ்சை சூரக்கோட்டை விவசாயி முருகானந்தம் கூறியதாவது: தற்போது சம்பா பயிர், 3 ஏக்கர், தாளடி பயிர், 2 ஏக்கர் போட்டுள்ளேன். சூரக்கோட்டையில் பலரும் சம்பா அறுவடையை துவக்கியுள்ளனர். நெல் மூட்டைகளை கொள்முதல் செய்ய, விவசாயிகள் வசதிக்காக, சூரக்கோட்டையில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் இயங்கி வந்தது. இங்கு கடந்த குறுவை அறுவடைக்காக திறந்த கொள்முதல் நிலையம், 2 மாதமாக மூடிக்கிடக்கிறது. அதனால் விவசாயிகள் தனியார் வியாபாரிகளிடம் நெல்லை விற்கிறோம். மக்கள் விரும்பி சாப்பிடுவதால், சன்ன ரகத்தை வியாபாரிகள் வாங்கி கொள்வர். மோட்டா ரகத்தை வாங்க மாட்டார்கள். அதனால் மோட்டார் ரக நெல்லை கொள்முதல் நிலையத்தில் தான் விற்க வேண்டும். சன்ன ரகம் நெல் மூட்டை (60 கிலோ கொண்டது), 830 ரூபாய்க்கும், மோட்டா ரகம், 790 ரூபாய்க்கும் அரசு கொள்முதல் நிலையத்தில் விற்கிறோம்.

இதுவே தற்போது வெளியில், சன்ன ரகத்தை ஒரு மூட்டை ( 60 கிலோ கொண்டது), 950 ரூபாய்க்கு வியாபாரிகள் வாங்குகின்றனர். மோட்டா ரகத்தை, 750 ரூபாய்க்கு தனியார் வியாபாரிகள் அடிமாட்டு விலைக்கு கேட்கின்றனர். சன்ன ரகத்துக்கு ரேட் தனியார் அதிகம் தந்தாலும், அறுவடை அதிகரித்தால், ரேட்டை வியாபாரிகள் குறைத்து விடுவர்.

அதனால் எப்படி பார்த்தாலும் விவசாயிக்கு தான் பாதிப்பு. கொள்முதல் நிலையத்தில் நெல் போட்டால், ரொக்கமாக கையில் வாங்கி கொள்ளலாம். அதனால் தேவையை அறிந்து கொள்முதல் நிலையம் அரசு திறக்க வேண்டும். மெயின்ரோட்டில் மட்டும் திறந்து, அதிகாரிகள் கணக்கு காட்டுகின்றனர். குக்கிராமத்தில் நிலையம் திறந்தால் தான் விவசாயிக்கு போக்குவரத்து செலவு குறையும், பயன் இருக்கும். இவ்விஷயத்தில் கலெக்டர் கவனம் செலுத்த வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

இதுகுறித்து தஞ்சை, திருவாரூர், நாகை மண்டல நுகர்பொருள் வாணிபக்கழக முதுநிலை மேலாளர்கள் முகமது பாதுஷா, அழகிரிசாமி, ராதாகிருஷ்ணன் ஆகியோர் கூறுகையில், ""தற்போது இயங்கி வரும் கொள்முதல் நிலையங்களின் எண்ணிக்கையை, சம்பா அறுவடையையொட்டி, அந்தந்த பகுதி தேவைக்கேற்ப உயர்த்தவும், புதிதாக திறக்கவும் கலெக்டர் உத்தரவு பெற்று நடவடிக்கை எடுக்கப்படும்," என்றனர்.

**கூடுதல் நீர் திறப்பு: விவசாயிகள் எதிர்ப்பு**

கூடலூர்: பெரியாறு அணையில் இருந்து, தமிழகப்பகுதிக்கு கூடுதல் நீர் திறந்து விட்டுள்ளதற்கு, கம்பம் பள்ளத்தாக்கு விவசாயிகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். பெரியாறு அணை நீர்பிடிப்பு பகுதியில் மழையின்றி, நீர்மட்டம் வெகுவாகக் குறைந்து வருகிறது. பெரியாறு அணை நீரை நம்பியுள்ள கம்பம் பள்ளத்தாக்குப் பகுதிகளில் தற்போது, இரண்டாம் போக நெல் சாகுபடி துவங்கியுள்ளது. இந்த சாகுபடிக்கு இன்னும் மூன்று மாதங்கள் தண்ணீர் தேவைப்படுகிறது. தற்போது, அணையில் உள்ள நீர் இருப்பு இதற்கு போதுமானதாக இல்லை. இதனால், அணையில் இருந்து தமிழகப்பகுதிக்கு திறந்து விடும் நீரின் அளவைக் குறைத்து, முறைப்பாசனம் அமல்படுத்த வேண்டும், என விவசாயிகள் கோரிக்கை விடுத்திருந்தனர். இதனை ஏற்று இரண்டு தினங்களுக்கு முன், தமிழகப்பகுதிக்கு திறக்கும் நீர், 344 கன அடியாக குறைக்கப்பட்டது. இரண்டு தினங்கள் மட்டும் இது நடைமுறையில் இருந்தது. நேற்று காலையில் அணையில் இருந்து தமிழகப்பகுதிக்கு திறந்து விடும் நீரின் அளவு 700 கன அடியாக

அதிகரிக்கப்பட்டது. இதனால், கம்பம் பள்ளத்தாக்கு விவசாயிகள் அதிர்ச்சியடைந்துள்ளனர். இந்நிலை நீடித்தால், கம்பம் பள்ளத்தாக்கில் இரண்டாம் போக நெல் சாகுபடி கேள்விக்குறியாகும் நிலை உள்ளதாக, விவசாயிகள் புலம்பியுள்ளனர். வைகை அணையில் இருந்து மதுரை மாவட்டம் மேலூர், கள்ளந்திரி விவசாய பாசனத்திற்காக 1600 கன அடி நீர் திறந்து விடப்பட்டுள்ள நிலையில், வைகை அணை நீர்மட்டம் குறையும் வாய்ப்புள்ளதால், பெரியாறு அணையில் கூடுதல் நீர் திறக்கப்பட்டுள்ளதாக, பொதுப்பணி துறை தரப்பில் கூறப்பட்டுள்ளது.

**விவசாயிகளுக்கு போலி உரம் சப்ளை மூடைக்குள் கல் இருந்ததால் அதிர்ச்சி**

தேனி ;தொடக்க விவசாய கூட்டுறவு சங்கங்கத்தில், விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட உர மூடைகளுக்குள் கருங்கற்களும், கட்டி சேர்ந்த கெட்டுப்போன உரமும் இருந்ததால் விவசாயிகள் அதிர்ச்சி அடைந்தனர். தேனி ஒயிட்ஹவுஸ்தெருவை சேர்ந்தவர் நடராஜன், 60. இவருக்கு சத்திரப்பட்டியில் தென்னந்தோப்பு உள்ளது. இதற்கு உரம் வைப்பதற்காக அரண்மனைப்புதூர் தொடக்க விவசாய கூட்டுறவு கடன் சங்கத்தில்,ரூ. 270.50 கொடுத்து 50 கிலோ எடையுள்ள யூரியா மூடை வாங்கினார்.மூடையை பிரித்த போது அதற்குள் உடைந்த கருங்கற்களும், கெட்டிசேர்ந்த உரக்கட்டிகளும் இருந்தன. நடராஜன் இது குறித்து தொடக்க விவசாய கூட்டுறவு சங்க அதிகாரிகளிடம் புகார் செய்தும், முறையான பதில் கிடைக்கவில்லை. நடராஜன் கூறியதாவது: அதிகாரிகளிடம் மூடையை தூக்கிச் சென்று காட்டியும், நாங்கள் பிரிக்காத மூடைக்குள், என்ன இருக்கிறது என்று எப்படி பார்க்க முடியும். நீங்கள் மூடையை பிரித்து கொண்டு வந்துள்ளீர்கள். இந்த கற்கள் மூடைக்குள் இருந்ததை எப்படி உறுதிப்படுத்த முடியும், என கேட்டு கை விரித்து விட்டனர். கட்டி சேர்ந்த உரத்தையும் பயன்படுத்த முடியவில்லை. என்னை போன்ற பல விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர், என்றார் நடராஜன். ஏற்கனவே கோடாங்கிபட்டி தொடக்க கூட்டுறவு சங்கத்தில் இதே போன்ற உரமூடைகள் சப்ளை செய்யப்பட்டு, கலெக்டர் வரை புகார் செய்யப்பட்டு, விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

இந்நிலையில், மீண்டும் ஒரு புகார் எழுந்துள்ளது. தேனி மாவட்ட உரக்கட்டுப்பாட்டு உதவி இயக்குனர் ஜெயபாண்டியன் கூறியதாவது: விவசாயத்துறை அதிகாரிகளை அனுப்பி, விவசாயி வாங்கிய உரமூடையை பார்வையிட்டு, கூட்டுறவு சங்கத்திலும் விசாரணை நடத்தி, கலெக்டருக்கு அறிக்கை கொடுத்து, நடவடிக்கைக்கு பரிந்துரைப்போம், என்றார்.

மாவட்டத்தில் கேழ்வரகு சாகுபடி பரப்பளவு கூடுதல் லாபத்தால் மாறும் விவசாயிகள்

ராமநாதபுரம்: ராமநாதபுரம் மாவட்டத்தில் கடந்த 2 ஆண்டுகளாக பருவமழை பொய்ப்பால், வறட்சியை தாங்கி விளையக்கூடிய சிறு தானிய பயிரான கேழ்வரகு சாகுபடியில் பெரும்பாலான விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.
பரமக்குடி, நயினார்கோவில், போகலூர், திருவாடானை, கமுதி, முதுகுளத்தூர் போன்ற பகுதிகளில் பெரும்பாலான விவசாயிகள் நெல்லிற்கு அடுத்தபடியாக, சிறுதானிய பயிரான கேழ்வரகு(கேப்பை) சாகுபடியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். 90 முதல் 100 நாட்களில் பயன்தரக்கூடிய இப்பயிர் மகசூல் பருவத்தை எட்டியுள்ளது.
குறிப்பாக நயினார்கோவில் ஒன்றியம் சின்ன அக்கிரமேசி, பாண்டியூர், மும்முடிசாத்தான், கே.வலசை, புதுக்குடியிருப்பு, மெய்யனேந்தல், சிறகிகோட்டை, குளத்தூர் உள்ளிட்ட பகுதிகளில் அதிகளவில் கேழ்வரகு சாகுபடி செய்யப்பட்டுள்ளது. விவசாயிகள் ஒவ்வொருவரும் தலா 2 முதல் 4 ஏக்கரில் பயிரிட்டுள்ளனர். கடந்த 2 ஆண்டுகளாக பருவமழை நெல் விவசாயிகளை ஏமாற்றி வரும்பட்சத்தில், இந்த கேழ்வரகு சாகுபடி, ஆறுதல் அளிக்கும் வகையில் உள்ளது.
விவசாயி, சுப்பிரமணியன்(சின்ன அக்கிரமேசி): போதிய மழை இல்லாததால் நெல் விவசாயம் பாதிக்கப்பட்டது. வறட்சியை தாங்கி விளையக்கூடிய கேழ்வரகு தானியத்தை ஒன்றரை ஏக்கரில் பயிரிட்டுள்ளேன். கடந்த 3 மாதம் அவ்வப்போது

பெய்யும் சாரல் மழையில் பயிர் தழைத்து, தற்போது மகசூல் பருவத்தை எட்டியுள்ளது. நடவு, உரமிடுதல், களை எடுப்பு போன்ற பணிகளுக்கு, ஏக்கருக்கு 6000 ரூபாய் முதல் ஒன்றரை ஏக்கருக்கு மொத்தம் 10 ஆயிரம் ரூபாய் வரை செலவு செய்தேன். தைப்பொங்கலையொட்டி, அறுவடை செய்யவுள்ளேன், என்றார்.விவசாயி, சரஸ்வதி: மழை நீரை நம்பியே விசாயம் செய்கிறோம். நெல் விவசாயத்திற்கு, தண்ணீர் அதிகம் தேவைப்படும். சிறு தானியத்திற்கு அப்படி கிடையாது. ஈரப்பதம் இருந்தால் போதும் விளைச்சல் நன்றாக இருக்கும். ஏக்கருக்கு 350 கிலோ வரை மகசூல் கிடைக்கும். கிலோ கேழ்வரகு, ரூ. 15 முதல் 20 ரூபாய் வரை விற்கிறது. இதனால், ஏக்கருக்கு செலவு போக, 10 ஆயிரம் ரூபாய் வரை நிகர லாபம் கிடைக்கும், என்றார்.வேளாண் அதிகாரி ஒருவர் கூறியதாவது: மாற்றுப்பயிராக கேழ்வரகு, குதிரைவாலி, வரகு, சோளம் போன்றவற்றை சாகுபடி செய்ய அறிவுறுத்தப்பட்டது. அதன்படி, மாவட்டத்தில் நடப்பாண்டு 870 ஏக்கரில் கேழ்வரகு சாகுபடி செய்யப்பட்டுள்ளது. கடந்தாண்டு, 665 ஏக்கரில் மட்டுமே சாகுபடி நடந்தது. ஏக்கருக்கு 15 முதல் 20 மூடை மகசூல் கிடைக்கும். தற்போது, ஒரு மூடை நெல் ரூ.1000க்கு விற்கப்படுகிறது. ஆனால், கேழ்வரகு ஒரு மூடை 1200 முதல் 1400 வரை விற்கப்படுகிறது, என்றார்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### அமோக விளைச்சலால் பச்சைமிளகாய் விலை சரிவு



சேலம் : தமிழகத்தில் பச்சை மிளகாய் விளைச்சல் அதிகரித்துள்ளதால், மார்க்கெட்டுக்கு வழக்கத்தை கூடுதலாக வரத்து வந்து கொண்டிருக்கிறது. இதனால் விலை சரிந்துள்ளது.தமிழகத்தில் கடந்த பெய்த பருவமழையால் அனைத்து பகுதிகளிலும் பச்சை மிளகாய் அமோக விளைச்சலை தந்துள்ளது. இதனால் மார்க்கெட்டுக்கு வழக்கத்தை விட பச்சை மிளகாய் வரத்து அதிகரித்துள்ளது. வழக்கமாக ஒரு உழவர்சந்தைக்கு 300 கிலோ பச்சை மிளகாய் விற்பனைக்கு வரும். கடந்த கோடையில் விளைச்சல் குறைந்ததால், 200 கிலோ மட்டுமே விற்பனைக்கு வந்தது.

தற்போது விளைச்சல் அதிகரிப்பால் 400 கிலோவுக்கு மேல் விற்பனைக்கு வருகிறது. கடந்த கோடையில் ரூ.50 என விற்கப்பட்ட ஒரு கிலோ பச்சை மிளகாய், படிப்படியாக விலை குறைந்து, தற்போது ரூ.20 என விற்பனை செய்யப்படுகிறது. வெளிமார்க்கெட்டில் ரூ.25 முதல் ரூ.30 என விற்பனையாகிறது.

**ராசிபுரம் கூட்டுறவு சங்கத்தில் ரூ.70 லட்சத்துக்கு பருத்தி ஏலம்**



ராசிபுரம்: ராசிபுரம் வேளாண்மை கூட்டுறவு உற்பத்தி விற்பனைய £ளர்கள் சங்கத்தில் நடைபெற்ற ஏலத்தில் ஸி70 லட்சத்திற்கு பருத்தி விற்பனை செய்யப்பட்டது.நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் வேளாண்மை கூட்டுறவு உற்பத்தி விற்பனையாளர்கள் சங்கத்திற்கு விவசாயிகள் 4,122 பருத்தி மூட்டைகளை விற்பனைக்காக கொண்டு வந்திருந்தனர்.இதில் டிசிஎச் ரகம் 780 மூட்டைகளும் (அதிகபட்சம் ரூ.7,009க்கும், குறைந்தபட்சம் ரூ.5,400 க்கும்), ஆர்சிஎச் ரகம் 3,342 மூட்டைகளும் (அதிகபட்சம் ரூ.5,209க்கும், குறைந்தபட்சம் ரூ.4,372க்கும்) ஏலம் பே £னது. பருத்தி நல்ல விலைக்கு ஏலம் போனதாக விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்தனர். ஒரே நாளில் ரூ.70 லட்சத்திற்கு பருத்தி ஏலம் போனது. இதில், 20க்கும் மேற்பட்ட வியாபாரிகள் பங்கேற்று கொள்முதல் செய்தனர்.

**பொங்கலுக்கு மஞ்சள் தயார் அறுவடைக்கு காத்திருக்கிறது**



சங்கராபுரம்: பொங்கல் பண்டிகையின்போது தேவைப்படும் முக்கிய பொருட்களில் ஒன்று மஞ்சள்.

இலைகளுடன் கூடிய மஞ்சளை கொத்தாக படையலில் வைத்து சாமி கும்பிடுவது வழக்கம்.இந்த மஞ்சளை விழுப்புரம் மாவட்டம் சங்கராபுரம் தாலுகாவில் நூற்றுக்கும் மேற்பட்ட கிராமங்களில் விவசாயிகள் ஆண்டு தோறும் பயிரிட்டு வருகின்றனர். தற்போது பொங்கல் பண்டிகை களை கட்ட துவங்கியுள்ள நேரத்தில் மஞ்சளும் அறுவடைக்கு தயார் நிலையில் இருக்கிறது.இது குறித்து விவசாய ஆலோசகர் சதிஷ்மன்னன் கூறுகையில், மஞ்சளை அறுவடை செய்து ஈரோடு மஞ்சள் மார்க்கெட்டுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. ஒரு ஏக்கருக்கு 25 முதல் 30 குவிண்டால் வரை மகசூல் கிடைக்கிறது. ஒரு குவிண்டால் 5000 முதல் 8000 வரை விலை போகிறது என்றார்.

**கரும்பு கொள்முதல் விலையை ரூ.4 ஆயிரமாக உயர்த்த வேண்டும் விவசாயிகள் வலியுறுத்தல்**

மதுரை, : கரும்பு கொள்முதல் விலையை தமிழக அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும். டன்னுக்கு ரூ.4 ஆயிரம் வழங்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது குறித்து தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்க மாநில தலைவர் பழனிச்சாமி, பொதுச் செயலாளர் ரவீந்திரன் விடுத்துள்ள அறிக்கை:

ஒரு டன் கரும்புக்கு பரிந்துரை விலை, லாரி வாடகை உட்பட ரூ.550, மத்திய அரசின் சட்டப்பூர்வ விலை ரூ.2,100 சேர்த்து மொத்தம் ரூ.2,650 என தமிழக அரசு நிர்ணயித்துள்ளது. இது விவசாயிகளுக்கு கட்டுப்படியாகாத விலை. மாநில அரசு விலையை அறிவிக்கும் முன் முத்தரப்பு கமிட்டியான கரும்பு விவசாயிகள், சர்க்கரை ஆலை உரிமையாளர்கள் மற்றும் அரசு அதிகாரிகளின் கூட்டத்தை கூட்டி, கருத்தை அறிந்திருக்க வேண்டும்.

கடந்த காலங்களில் முத்தரப்பு கமிட்டியை கூட்டிதான் விலை அறிவிக்கப்பட்டது. தற்போது கரும்பு உற்பத்திச் செலவு கடுமையாக உயர்ந்துள்ளது. இதனை

ஆராயாமல், விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. ஆனால் கரும்பில் கிடைக்கும் உபபொருட்களான மொலாசஸ், எத்தனால், உரம், பா¢க்காஸ், கரும்பு சக்கையிலிருந்து எடுக்கப்படும் மின்சாரம் இவற்றில் இருந்து கிடைக்கும் லாபத்திலிருந்து விலை நிர்ணயம் செய்யப்படுவதில்லை. விவசாயிகளுக்கு பங்கும் கொடுப்பதில்லை. 1966 கருப்புக்கட்டுப்பாட்டு சட்டத்தை மாற்ற வேண்டும். உத்தரப்பிரதேசத்தில் கரும்பு டன்னுக்கு ரூ.2,800, பஞ்சாப், ஹரியானாவில் ரூ.3,200 வீதம் கொடுக்கப்படுகிறது. தமிழகத்தில் உரிய விலை இல்லாமல் கரும்பு விவசாயிகள் வேறு விவசாயத்திற்கு செல்கின்றனர். கரும்பு விவசாயம் அழியும் நிலை உருவாகியுள்ளது. தமிழக அரசு கரும்பு விலையாக டன்னுக்கு ரூ.4 ஆயிரம் வழங்க வேண்டும். அரசின் கவனத்தை ஈர்க்க தொடர் போராட்டத்தை நடத்த உள்ளோம் என்றார்.

**டெல்டா விவசாய சங்கங்கள் எதிர்பார்ப்பு கரும்பு விலை மறுபரிசீலனை செய்யப்படுமா?**

திருச்சி,: கரும்புக்கு தமிழக அரசு அறிவித்துள்ள கொள்முதல் விலையை உயர்த்தாவிட்டால் தொடர் போராட்டம் நடத்தப்படும் என டெல்டா விவசாய சங்கத்தினர் முடிவு செய்துள்ளனர்.

கடந்த ஆண்டு கரும்புக்கு மத்திய அரசு ஆதார விலையாக டன் ரூ.1,700 வழங்கியது. மாநில அரசு ஆதரவு விலையாக வாகன வாடகை உள்பட ரூ.650 என அறிவித்தது. அந்த வகையில் கடந்த ஆண்டு கொள்முதல் விலையாக ரூ.2,350 வழங்கப்பட்டது. இந்த ஆண்டு மத்திய அரசு ஆதார விலையாக டன் னுக்கு ரூ.400 உயர்த்த¤ ரூ.2,100 ஆக அறிவித்தது. மத்திய அரசு அறிவித்த விலையோடு, ஆதரவு விலை ரூ.550 சேர்த்து ரூ.2,650 கொள்முதல் விலையாக வழங்கப்படும் என்று முதல்வர் ஜெயல லிதா அறிவித்துள்ளார். இதில் வாகன வாடகை, வெட்டுக்கூலி ஆகியவை யும் சேர்ந்துள் ளதால் அர சின் இந்த அறி விப்பு பெரும் ஏமாற்றத்தை அளிப்பதாக டெல்டா விவசாய சங்கங்கள், விவசாய பிரதிநிதிகள்

குற்றம் சாட்டியுள்ளனர். இதுகுறித்து காவிரி டெல்டா பாசன நல சங்க செயல் தலைவர் ராஜாராம் கூறுகையில், நடப்பாண்டு கரும்பு டன்னுக்கு ரூ.3,500 கிடைக்கும் என எதிர்பார்த்த நிலையில், முதல்வர் அறிவித்த இந்த விலை விவசாயிகளுக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. எனவே முதல்வர் அறிவித்த விலை உயர்வை உடனே மறு பரிசீலனை செய்வதோடு, கரும்புக்கு நியாயமான விலையை அறிவிப்பார் என நம்புகிறோம். போக்குவரத்து செலவு களை ஆலைகளே ஏற்றுக் கொள்கிறது. வெட்டுக் கூலி களை ஒரே மாதிரியாக விலை நிர்ணயிக்க வேண் டும். கரும்பு ஆலைகள் அல்லது அரசே வெட்டுக்கூலியை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றார்.

தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் அயிலை சிவசூரியன் கூறு கையில், தமிழகத்தில் கடும் வறட்சியால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், தமிழக அரசின் இந்த அறிவிப்பு விவசாயிகளுக்கு பெரும் ஏமாற்றத்தை அளித்துள்ளது. எனவே அரசு கரும்பு விவசாயிகள் நலன் கருதி, டன்னுக்கு ரூ.3,500 என விலை நிர்ணயம் செய்ய வேண்டும்.

கடந்த 3 ஆண்டுகளாக முத்தரப்பு கூட்டத்தை கூட்டாமலும், விவசாயிகளின் கருத்து களை கேட்காமலும் கரும்பு விலை அறிவிக்கப்பட்டு வருகிறது. எனவே தமிழக அரசு முத்தரப்பு கூட்டத்தை கூட்டுவதோடு, விவசாயிக ளின் கருத்துக்களை கேட்டு கரும்பு விலையை அறிவிக்க வேண்டும். இது தொடர் பாக மாநில பொதுக்குழு கூடி விரைவில் தொடர் போராட்டம் என்ன என்பது குறித்து முடிவு எடுக்கப்படும் என்றார்.

பாரதிய கிசான் சங்க மாநில துணைத் தலைவர் அய்யாக்கண்ணு கூறுகை யில், போதிய மழை இல்லாமலும், நல்ல விலை கிடைக்காமலும் கரும்பு விவசாயிகள் ஏற்கனவே கடன் சுமையில் உள்ளனர். இந்நிலையில் அரசின் இந்த அறிவிப்பு அவர்களுக்கு பெரும் ஏமாற்றத்தையே அளிக்கிறது.

கரும்பு விவசாயிகளுக்கு டன்னுக்கு குறைந்தது ரூ.5 ஆயிரமாவது வழங்கினால் தான் விவசாயிகளை தற்கொலை முடிவில் இருந்து காப்பாற்ற முடியும். தமிழக அரசு உடனே இதை மறுபரிசீலனை செய்ய வேண்டும். இல்லாவிட்டால் அடுத்த கட்ட போராட்டம் குறித்து இன்று (23ம்தேதி) நடை பெறும் பாரதிய கிசான் சங்க

அவசரக் கூட்டத்தில் அறிவிக்கப்படும் என்றார்.

பொருளாதார இழப்பு ஏற்படும்

தமிழகத்தில் அக்டோபர் மாதத்தில் சர்க்கரை ஆலையில் பணிகள் தொடங்க வேண்டிய நிலையில், கரும்பு சாகுபடியின் பரப்பளவு தொடர்ந்து குறைந்து வருவதால், ஜனவரி மாதத்திலாவது தொடங்கப்படுமா என்பது கேள்விக்குறியாக உள்ளது.

கரும்பாலையுடன் தொடர்புடைய தொழிலாளர்கள், ஆலைப்பணியாளர்கள், டிராக்டர் மற்றும் கனரக வாகன உரிமையாளர்கள் மற்றும் பணியாளர்கள் என 10 லட்சம் தொழிலாளர்களுக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலை அளித்து வந்த நிலையில், தற்போது தமிழக அரசு அறிவிப்பால் மேலும் கரும்பு சாகுபடி பரப்பு குறைந்து விவசாய மற்றும் தொழிலாளர்களுக்கு பெரிய அளவில் பொருளாதார இழப்பை ஏற்படுத்தும் அபாயமும் உள்ளது.

**பால் உற்பத்தி நிறுத்த போராட்டம் கீழ்பவானி விவசாயிகள் சங்கம் ஆதரவு**

ஈரோடு, : கொள்முதல் விலையை உயர்த்த கோரி நடைபெற உள்ள பால் உற்பத்தியாளர்களின் போராட்டத்திற்கு கீழ்பவானி விவசாயிகள் சங்கம் ஆதரவு தெரிவித்துள்ளது. இது தொடர்பாக கீழ்பவானி விவசாயிகள் நலச்சங்கத்தின் தலைவர் நல்லசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீரை வழங்க வேண்டிய கடமையும், பொறுப்பும் கொண்டுள்ள அரசுகள் குடிநீரை விற்பனை செய்து கொண்டுள்ளது. தமிழ்நாட்டில் பசும்பால் கொள்முதல் விலையாக லிட்டர் ஒன்றுக்கு ரூ.20ம், எருமைபால் கொள்முதல் விலையாக ரூ.26 ஆக உள்ளது. கர்நாடக மாநிலத்தில் உற்பத்தியாகும் பாலுக்கு கர்நாடக அரசு லிட்டர் ஒன்றுக்கு ரூ.4 மானியம் கொடுத்து வருகின்றது. இந்த தொகையுடன் ஒன்றியம் கொடுக்கும் தொகை ரூ.1ம் சேர்த்து ரூ.5 ஆக மானியம் வழங்கப்படுகின்றது.

ஆனால் தமிழ்நாட்டில் பால் உற்பத்தியாளர்களுக்கு லிட்டர் அடிப்படையில் மானியம் வழங்கப்படுவதில்லை. எனவே கர்நாடக அரசை பின்பற்றி தமிழக அரசு பால் லிட்டர் ஒன்றுக்கு ரூ.5 மானியம் வழங்க வேண்டும். இக்கோரிக்கைகளை வலியுறுத்தி வருகின்ற ஜனவரி 1ம் தேதி முதல் தமிழ்நாடு முழுவதும் ஆவினுக்கு

பால் கொடுப்பதில்லை என்று பால் உற்பத்தியாளர்கள் நலச்சங்கம் முடிவெடுத்துள்ளது. நியாயமான கோரிக்கையை முன்வைத்து நடைபெற உள்ள இப்போராட்டத்தில் கீழ்பவானி விவசாயிகளும் கலந்து கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுளளது.

**நல்லூர் குளம் மழையால் நிரம்பியது 15 ஆண்டுக்கு பிறகு விவசாயிகள் வறட்சி பகுதியில் நெல் சாகுபடி**

சத்தியமங்கலம்,: புஞ்சைபுளியம்பட்டி சுற்று வட்டார கிராமங்கள் வறட்சிப்பகுதியாகும். வானம் பார்த்த பூமி என்பதால் மழைக்காலங்களில் மானாவாரி பயிராக நிலக்கடலை, தீவனசோளம் போன்ற பயிர்களை விவசாயிகள் அதிக அளவில் சாகுபடி செய்வது வழக்கம்.

கடந்த 2 மாதங்களுக்கு முன்பு இப்பகுதியில் பெய்த பலத்த மழை காரணமாக நல்லூர் குளம் நிரம்பி வழிந்து அருகே உள்ள புங்கம்பள்ளி குளமும் நிறைந்துள்ளது. குளங்கள் நிரம்பியுள்ளதால் சுற்றியுள்ள கிணறுகள் மற்றும் ஆழ்குழாய் கிணறுகளில் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்துள்ளது. இதனால் சுமார் 100 ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறும் நிலை ஏற்பட்டுள்ளது.

இது குறித்து 15 ஆண்டுகளுக்கு பிறகு நெல் பயிரிட்டுள்ள நல்லூர் கிராமத்தை சேர்ந்த விவசாயி தங்கராஜ் கூறியதாவது: குளம் நிரம்பியுள்ள காரணத்தால் கிணற்றில் நீர் நிரம்பியுள்ளது.

இந்நீரை பயன்படுத்தி நெல் நாற்றங்கால் தயார் செய்து தற்போது நடவுப்பணி நடைபெற்று வருகிறது. எனக்கு தெரிந்த வரை கடந்த 15 ஆண்டுகளுக்கு முன்பு குளத்தில் நீர்நிறைந்து ஒருமுறை நெல் பயிரிட்டோம். அதன்பிறகு இப்போதுதான் மழையின் கருணையால் வறட்சிப்பகுதியான எங்களது நிலத்தில் நெல் பயிரிடும் வாய்ப்பு கிடைத்துள்ளதால் மகிழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

கிடைக்கும் நீரை பயன்படுத்தி சிக்கனமாக நீர்ப்பாசனம் செய்தால் குளத்து நீரை பயன்படுத்தி ஓராண்டு வரை தொடர்ந்து விவசாயம் செய்யமுடியும். இவ்வாறு விவசாயி தங்கராஜ் கூறினார்.

**புதுவையில் கடும் பனிப்பொழிவு**

புதுச்சேரி, : புதுவையில் கடந்த சில நாட்களாக கடுங்குளிர் பொதுமக்களை வாட்டி வதைக்கிறது. மாலை 5 மணிக்கு தொடங்கும் குளிர்காற்று மறுநாள் காலை 9 மணி வரை நீடிக்கிறது. இதனால் குழந்தைகள், நோயாளிகள், முதியவர்கள் உள்பட அனைவரும் அவதிக்குள்ளாகினர். கடுங்குளிரிலிருந்து தங்களை காப்பாற்றிக் கொள்ள சுவட்டர், குல்லா போன்றவற்றை பொதுமக்கள் வாங்கி அணிந்து வருகின்றனர்.

பிளாட்பார வாசிகள் அதிகாலையில் விறகு அடுப்பு பற்றவைத்து சூடேற்றி உடலுக்கு சூடேற்றுகின்றனர். இருப்பினும் பெண்கள் மார்கழி குளிரை பொருட்படுத்தாமல் வீடுமுன் பல வண்ண கோலங்கள் வரைந்து வருகின்றனர். மேலும் காலையில் பனிமூட்டம் அதிகரித்திருப்பதால் வாகன ஓட்டிகளுக்கு சிரமம் ஏற்பட்டுள்ளது.

விடிந்த பிறகும் முகப்பு விளக்குகளை எரியவிட்டபடி வாகனங்கள் சாலைகளில் அணிவகுத்தன.

குளிர்காலம் தொடங்கி விட்டதால் வெளி மாநிலங்களிலிருந்து சுவட்டர், குல்லா உள்ளிட்டவை புதுவையில் விற்பனைக்கு வந்துள்ளன.

**விதை உற்பத்தி செய்யும் விவசாய குழுக்களுக்கு சுழல்நிதி**

திருக்கோவிலூர், :திருக்கோவிலூர் வட்டம் முகையூர் வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகத்தில் விதை உற்பத்தி மற்றும் நவீன தொழில்நுட்பங்கள் குறித்த கருத்தரங்கு நடந்தது. ஆத்மா திட்ட தலைவர் கங்காதரன், மாவட்ட கவுன்சிலர்கள் தங்கராசு, இளங்கோவன், வீரங்கிபுரம் ஊராட்சி மன்ற தலைவர் சுதா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தலைமை தாங்கிய வேளாண்மை உதவி இயக்குனர் கென்னடிஜெபக்குமார் பேசும்போது ‘விவசாய உற்பத்தியை அதிகரிப்பதில் வீரிய விதைகளின் பங்கு

முக்கியமானது. விவசாயிகள் தரமான வீரிய ரக விதைகளை பயன்படுத்தினாலே 20-25 சதவீதம் மகசூல் கூடுகிறது. வேளாண்துறை மூலம் 17 சதவீதம் விதை தேவை பூர்த்தி செய்யப்படுகிறது. எஞ்சிய 83 சதவீதம் தனியார் விவசாயிகளிடம் விதை பரிமாற்றம் மூலம் பூர்த்தி செய்யப்படுகிறது.

விவசாயிகளிடையே விதை பரிமாற்றம் மூலம் பெறப்படும் விதைகள் சரியான தொழில்நுட்பங்களை பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படாததால் விதைகள் போதுமான தரமின்றி மகசூல் இழப்பும் ஏற்படுகிறது. இதனை சரிசெய்யும் விதத்தில் தமிழக அரசு நீர்வள திட்டத்தில் அந்தந்த கிராமங்களில் தரமான விதைகள் உற்பத்தி செய்திடும் வகையில் விவசாய குழுக்களுக்கு சுழல்நிதி ரூ.50 ஆயிரம் வழங்குகிறது. தகுதியான குழுக்கள் வேளாண் துறை அலுவலகத்தில் விண்ணப்பம் செய்து பயனடைந்து கொள்ளலாம். மேலும் தமிழக அரசின் விவசாய மேம்பாட்டு திட்டங்களை முழுமையாக பெற்று பயனடைந்து உற்பத்தியை அதிகரித்திட வேண்டும் என்றார்.அதனை தொடர்ந்து விவசாயிகளுக்கு நவீன தொழில்நுட்பங்கள் குறித்த செயல் விளக்கங்களை உதவி வேளாண்மை அலுவலர்கள் சிவநேசன், வெங்கடகிருஷ்ணன், வெங்கடேசபெருமாள், திருமலை, செந்தில்குமார், சிவக்குமார் ஆகியோர் செய்து காண்பித்தனர். கருத்தரங்கிற்கான ஏற்பாடுகளை துணை வேளாண்மை அலுவலர் புகழேந்தி, ஆத்மா திட்ட மேலாளர் செந்தில்குமார் ஆகியோர் செய்திருந்தனர்.

## கரும்புக்கு கொள்முதல் விலை உயர்த்தாவிட்டால் போராட்டம்

தர்மபுரி, :தமிழக விவசாயிகள் சங்கம் சார்பில் 12 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி தர்மபுரி மாவட்ட கலெக்டர் அலுவலகம் முன் ஆர்ப்பாட்டம் நடந்தது. மாநிலத் தலைவர் சின்னசாமி தலைமை வகித்தார். மாவட்ட தலைவர் செங்கோடன், செயலாளர்கள் சக்திவேல், குப்புசாமி, பொருளாளர் பழனி, டிராக்டர் சங்க தலைவர் மாதேஸ்வரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாநில

பொதுச்செயலாளர் சுந்தரம், மாநில பொருளாளர் வேலுமணி, மாநிலத் துணைத்தலைவர் ஆறுமுகம், மாநில பிரசாரக்குழு செயலாளர் கிருஷ்ணமூர்த்தி, மாநில செயலாளர் வேலுநாய்க்கர், கிருஷ்ணகிரி மாவட்ட தலைவர் ஸ்ரீராம்ரெட்டி, செயலாளர் சென்னையநாயுடு, பொருளாளர் ராஜரத்தினம், முன்னாள் மாவட்ட செயலாளர் சின்னசாமி, வேலூர் மாவட்ட செயலாளர் தனபால், சேலம் மாவட்ட தலைவர் பழனிமுருகன், செயலாளர் பெரியண்ணன் ஆகியோர் கலந்து கொண்டு பேசினார். இதில் மாநிலத் தலைவர் சின்னசாமி கூறியதாவது:

தமிழக அரசு நடப்பு ஆண்டுக்கு கரும்புக்கு அறிவித்துள்ள கொள்முதல் விலை மிகுந்த ஏமாற்றம் தருவதாக உள்ளது. மத்திய அரசு அறிவித்துள்ள டன்னுக்கு ரூ400 விலை உயர்வை விட ரூ100 குறைவாக உள்ளது. கடுமையான வறட்சி, உற்பத்தி செலவு உயர்வு ஆகியவற்றை கருத்தில் கொண்டு மறுபரிசீலனை செய்து டன்னுக்கு ரூ4 ஆயிரம் விலை அறிவிக்க வேண்டும் என தமிழக அசை கேட்டுக்கொள்கிறோம். கரும்பு கொள்முதல் வரி, செஸ்வரியை ரத்து செய்து கரும்பு விலையோடு சேர்த்து வழங்க வேண்டும்.

தேசிய வங்கிகளில் பெற்ற கடன்களுக்காக வசூல் முகவர்களை வைத்து டிராக்டர் மற்றும் உழவுகருவிகளை பறிமுதல் செய்வது, நீதிமன்றத்தில் வழக்கு தொடுப்பது போன்றவற்றை கைவிட்டு தேசிய வங்கி விவசாய கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும் என மத்திய அரசை கேட்டுக்கொள்கிறோம். பறிமுதல் செய்யப்பட்ட டிராக்டர் மற்றும் உழவுகருவிகளை நிபந்தனையின்றி திருப்பித்தர வேண்டும். விவசாயிகளுக்கு பட்டா வழங்க வேண்டும், வனவிலங்குகளால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்க வேண்டும், தனிநபர் காப்பீடு கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மஞ்சள் குவிண்டாலுக்கு ரூ10 ஆயிரம் விலை நிர்ணய செய்ய வேண்டும். தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்ட தொழிலாளர்களை விவசாயத்திற்கு பயன்படுத்த அனுமதிக்க வேண்டும்

**6 வாரமாக தொடர்ந்து மூடல் மணப்பாறை மாட்டுச்சந்தையை திறக்க வலியுறுத்தி கலெக்டரிடம் மனு**

மணப்பாறை, : மணப்பாறையில் தொடர்ந்து 6 வாரமாக செயல்படாமல் உள்ள மாட்டுச்சந்தையை மீண்டும் செயல்பட வைக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கலெக்டரிடம் கோரி க்கை மனு விடுத்துள்ளனர்.

திருச்சி மாவட்டம், மணப்பாறையில் வாரந்தோறும் செயல்பட்டு வரும் மாட்டுச்சந்தை நகராட்சிக்கு சொந்தமானதாகும். இந்த மாட்டுச்சந்தை தமிழகத்தில் மிகவும் புகழ்பெற்றதாகும். இந்த சந்தை வாரந்தோறும் செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு துவங்கி, புதன் கிழமை பிற்பகல் 2மணி வரை நடைபெறும். இந்த சந்தைக்கு தஞ்சாவூர், புதுக்கோட்டை, சிவகங்கை, மதுரை, சேலம், தேனி, ஈரோடு, கோவை உள்ளிட்ட தமிழகத்தின் பல்வேறு பகுதிகள் மற்றும் கேரளா போன்ற வெளி மாநிலங்களிலிருந்தும் மாடுகள் விற்பனைக்காகவும், வாங்கிச் செல்வதற்காகவும் விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் பெருமளவில் வந்து கூடுவர்.

வாரந்தோறும் சந்தைக்கு 3,000 முதல் 4,000 மாடுகள் வரை விற்பனைக்காக கொண்டு வரப்படும். இந்த மாட்டுச்சந்தை மூலம் மணப்பாறை மற்றும் சுற்று வட்டார பகுதிகளை சேர்ந்த வியாபாரிகள், இடைத்தரகர்கள், கயிறு, தீவனங்கள் விற்பவர்கள், மாட்டுக்கு கொம்பு சீவுபவர்கள், வெளியூர்களில் இருந்து வரும் வியாபாரிகளுக்கு இரவு படுக்கைக்கு கட்டில் வாடகைக்கு விடுபவர்கள் மற்றும் இதை நம்பி உள்ள சிறு ஓட்டல் மற்றும் டீ கடைக்காரர்கள், சிறு வியாபாரிகள், மாடுகளை ஏற்றி, இறக்கும் 1,000க்கும் மேற்பட்ட லாரி மற்றும் மினி ஆட்டோக்கள் என பல்வேறு வகைகளில் சுமார் 5,000 க்கும் மேற் பட்ட குடும்பங்கள் நேரடியாகவும், மறைமுகமாகவும் பயன் பெற்று வருகின்றனர். இந்நிலையில் தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் பரவி வரும் கோமாரி

நோயால் மாடுகள் உயிரிழந்து வருகின்றன. எனவே மணப்பாறை மாட்டு சந்தையை  நடத்த மாவட்ட நிர்வாகம் தடை விதித்துள்ளது. இந்த வாரத்துடன் சேர்த்து 6வது வாரமாக மாட்டுச்சந்தை நடக்கவில்லை. மணப் பாறை மாட்டுச் சந்தையை பொறுத்தவரை இதுவரை எந்த காரணங்களுக்காகவும் தடை செய்யப்பட்டது இல்லை. தீபாவளி மற்றும் பொங்கல் பண்டிகை, தேர்தல் நாட்களின் போது கூட சந்தையை வேறொறு நாளுக்கு மாற்றி வைத்துள்ளனர். ஆனால் தற்போது தான் முதன் முறையாக தடை செய்யப்பட்டுள்ளதாக வியாபாரி கோவிந்தன்  தெரிவித்தார்.

இந்நிலையில், மணப் பாறை மாட்டுச்சந்தைக்கு விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்கி சந்தையை தொடர்ந்து நடத்த அனுமதிக்க வேண்டும் என இதுவரை மக்கள் 3 முறை திருச்சி கலெக்டரை சந்தித்து மனு கொடுத்துள்ளனர். இந்நிலையில் நேற்றும் 5வது முறையாக மணப்பாறையை சேர்ந்த கால்நடையாளர்கள் திருச்சிக்கு வந்து மாவட்ட கலெக்டரை சந்தித்து மனு கொடுத்தனர்.

மேலும் மற்ற மாவட்டங்களில் உள்ள மேலபாளை யம், வள்ளியூர், திரு வோணம், மீன்சுருட்டி ஆகிய பகுதிகளில் தடை செய்யப்பட்டிருந்த மாட்டுச் சந்தைகள் தற்பொழுது செயல்பட்டு வருவதாகவும் வியாபாரிகள் தெரிவித்தனர்.

இந்நிலையில் அடுத்த மாதம் தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் திருவிழா வரும் நிலையில், சிறு சிறு விவசாயிகள் கூட புதிதாக மாடு களை வாங்கி வீடுகளில் கட்டுவது ராசியானதாக கருதப்பட்டு வருகிறது. எனவே கோமாரி நோயை தடுக்க அரசு தீவிர நடவடிக்கை எடுத்து, நிறுத்தி வைக்கப்பட்டுள்ள மாட்டுச்சந்தையை மீண்டும் நடத்த அனுமதி வழங்க வேண்டும் என விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

**பழநியில் காய்கறி விலை குறைந்தது ஓட்டல்களில் உணவு பண்டங்கள் விலை குறையவில்லை பக்தர்கள் சிரமம்**

பழநி, : காய்கறிகளின் விலை குறைந்துள்ள நிலையில், ஓட்டல்களில் உணவு பண்டங்களின் விலை குறையாததால் பக்தர்கள் அவதிக்குள்ளாகி உள்ளனர். பொள்ளாச்சி பகுதியில் ஓரளவு மழை பெய்துள்ளதால் காய்கறிகளின் விளைச்சல் அதிகரித்துள்ளது. இதனால் பழநி சந்தைக்கு காய்கறிகளின் வரத்து அதிகரித்துள்ளது. வரத்து அதிகம் காரணமாக காய்கறிகளின் விலை குறைந்துள்ளது. எனினும், விலை உயர்வின்போது ஓட்டல்களில் உயர்த்தப்பட்ட உணவு பண்டங்களின் விலை இதுவரை குறைக்கப்படவில்லை. ரூ.25க்கு விற்பனை செய்யப்பட்ட வெங்காய ஊத்தாப்பம், வெங்காயம் விலை உயர்வுக்கு பின் ரூ.45க்கு விற்பனை செய்யப்பட்டது.

ரூ.70க்கு விற்பனை செய்யப்பட்ட பல்லாரி தற்போது கிலோ ரூ.22க்கு விற்பனை செய்யப்படுகிறது. ஆனாலும் ஓட்டல்களில் உணவு பண்டங்களின் விலை குறைக்கப்படவில்லை. இதுபோல் இதர காய்கறிகளின் விலையும் கணிசமாக குறைந்துள்ளது. இருப்பினும் ஓட்டல்களில் உணவு பண்டங்களின் விலை குறைக்கப்படாததால் பழநி வரும் பக்தர்கள் சிரமத்திற்குள்ளாகி வருகின்றனர். இதுகுறித்து பழநி காந்தி மார்க்கெட்டை சேர்ந்த காய்கறி வியாபாரி ரகுமான் கூறியதாவது:

வரத்து அதிகம் காரணமாக காய்கறிகளின் விலை குறைந்துள்ளது. கடந்த சில வாரங்களாக கிலோ ரூ.25க்கு விற்பனையான தக்காளி ரூ.10க்கும், கிலோ ரூ.90க்கு விற்பனையான வெங்காயம் ரூ.35க்கும், கிலோ ரூ.44க்கு விற்பனையான அவரைக்காய் ரூ.30க்கும், கிலோ ரூ.28க்கு விற்பனையான கத்தரிக்காய் ரூ.14க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

கிலோ ரூ.40க்கு விற்பனையான பீன்ஸ் ரூ.16க்கும், ரூ.60க்கு விற்பனையான

கேரட் ரூ.32க்கும், ரூ.160க்கு விற்பனையான பட்டர்பீன்ஸ் ரூ.100க்கும், ரூ.200க்கு விற்பனையான பச்சைபட்டாணி ரூ.80க்கும், ரூ.40க்கு விற்பனையான உருளைக்கிழங்கு ரூ.28க்கும் விற்பனையாகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

**பனை வெல்ல உற்பத்தி இலவச பயிற்சி முகாம்**

சிவகங்கை, : காளை யார்கோவிலில் பனை வெல்லம் உற்பத்தியாளர் சங்கம் சார்பில் பயிற்சி முகாம் நடந்தது.

இந்த முகாமிற்கு ராமநாதபுரம், சிவகங்கை மாவட்ட பனைவெல்ல கூட்டுறவு சம்மேளன தலைவர் சேதுபாலசிங்கம் தலைமை வகித்தார். துணை தலைவர் முத்துக்குமரன் வரவேற்றார். இந்த பயிற்சி முகாமில் பதனியிலிருந்து பனைவெல்லம் (கருப்பட்டி) செய்வது, பனை ஓலையின் மூலம் முறம், பல்வேறு வடிவிலான கூடைகள், கைப்பை, பாய்கள், தொப்பி, தரைவிரிப்புகள், குழந்தைகளுக்கான பந்து, கிளுகிளுப்பை உள்ளிட்ட விளையாட்டுப் பொருள்கள், அழகு பொருள்கள் என சுமார் நாற்பதுக்கும் மேற்பட்ட பொருள்கள் செய்வது குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது.

சிவகங்கை மாவட்ட பனைவெல்ல உற்பத்தி யாளர் சங்க தலைவர்கள் கூட்டமைப்பு தலைவர் கஸ்பார், அ¬ம்பபாளர் பழனிக்குமார், மாவட்ட சிறுதொழில்கள் சங்கத் தலைவர் கண்ணப்பன், மாவட்ட விவசாயிகள் சங்கத்தலைவர் ஆபிரகாம் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். வேம்பார் கிராமத்தை சேர்ந்த மாரியம்மாள் குழுவினர் பயிற்சியளித் தனர். இப்பயிற்சி முகாமில் ஏராளமானோர் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர்.

**நேரடி நெல் விதைப்பு தொழில்நுட்பம் மார்கழியில் பூச்சி தாக்குதல் கட்டுப்படுத்தும் வழிகள்**

புதுக்கோட்டை, : புதுக்கோட்டையை அடுத்த குறுந்தடிமனையில் நேரடி நெல் விதைப்பு தொழில்நுட்பம் குறித்த செயல்விளக்க பயிற்சி விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

புதுக்கோட்டை வம்பன் வேளாண் அறிவியல் நிலையம் மூலம் தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் நேரடிநெல் விதைப்பில் கடைப்பிடிக்க வேண்டிய உயரிய தொழில்நுட்பங்கள் பற்றிய ஒரு நாள் தொழில்நுட்ப செயல் விளக்க பயிற்சி  நடைபெற்றது. பயிற்சியில் உதவி பேராசிரியர் கீதா (மனை யியல் துறை) தலைமை வகித்து பேசுகையில், சரி யான அளவில் உரங்கள் மற்றும் மருந்துகளை பயன்படுத்த வேண்டும். அதிக அளவில் பூச்சி மருந்துகளை பயன்படுத்துவதால் மண்ணின் தன்மை மற்றும் உணவு தானியங்களின் தன்மை மாறுபட்டுவிடும் என்றார்.

உதவி பேராசிரியர் கதிரவன் (விதை அறிவியல் மற்றம் தொழிலநுட்பம்) பேசுகையில், உயிர் உரங்களான அசோஸ்பைரில் லம், பாஸ்போ பாக்டீரியா ஆகியவற்றை ஒரு எக்டர் விதைக்கு 600 கிராம் என்ற அளவில் ஆறிய அரிசிக்கஞ்சியில் கலந்து விதைக்க வேண்டும். நடப்பட்ட நாற்று வேர் பிடித்து பச்சை நிறமடைந்து நன்றாக வளர தழைச்சத்து அடியுரமாக இடுவது அவசியம். பொதுவாக நெல் வயிலில் இட்ட தழைச்சத்து 30 சதவிகிதம் மட்டுமே பயிருக்கு கிடைக்கும் வாய்ப்பு உள் ளது. எனவே தழைச்சத்து வீணாவதை குறைத்து பயிரு க்கு கிடைக்க ஏதுவாக 5: 4: 1 என்ற சதவிகிதத்தில் யூரியா, ஜிப்சம், வேப்பம் புண்ணா க்கு கலந்து 24 மணி நேரம் வைத்திருந்து நடவு வயலில் சீராகத் துவவேண்டும். மேலும் சம்பா நெல் ரகங்களுக்கு நட்ட 25, 50, 75, 100 ஆகிய நாட்களில் இடவேண்டும்.  மணிச்சத்து நெற்பயிரில் இளமைப் பருவத்தில் வேர்

பிடித்து நன் றாக வளர்வதற்கும், பூக்கள் பூப்பதற்கும், நெல் மணி களின் வளர்ச்சி, எண்ணிக் கை, முதிர்வடைதல் ஆகியவற்றை சீராக்கி விளைச்சலை பெருக்கவும் வழிவகை செய்கின்றன. முழு உரத்தையும் அடியுரமாக இடவேண்டும். நெல் மணிகளின் எடையை அதிகரித்து பதர்களின் எண்ணிக்கையை குறைத்து விளைச்சலை அதிகரிக்கின்றன என்றார்.

பூச்சியல் துறை உதவிப்பேராசிரியர் சாமிநாதன் பேசுகையில், புழுக்கள் இலைகளை நீளவாக்கில் மடித்து பச்சையத்தை சுரண்டி உண்பதால் இலைகளில் வெள்ளையாக காணப்படும். புரட்டாசி முதல் மார்கழி வரை இப்பூச்சிகளின் தாக்குதல் அதிகமாக இருக்கும். இதனை கட்டுப்படுத்த, பரிந்துரைக்கப்பட்ட அளவு மட்டுமே உரமிட வேண்டும். தழைச்சத்தினை பிரித்து மூன்று தடவை இடவேண் டும். டிரைகடகோகிரம்மா கைலோனிஸ் என்ற முட் டை ஒட்டுண்ணியை ஏக்கருக்கு 2 மிலி என்ற அளவில் நடவு செய்த 37, 44 மற்றும் 51 வது நாட்களில் வயல்களில் விடவேண்டும் என்றார். உதவி பேராசிரியர் மதியழகன் பேசுகையில், நடவு செய்த 3, 4 வாரங்களில் அதாவது தூரடிக்கும் பருவத்தில் தோன்றும் முழு பயிரும் வாடிவிடும், ஆரம்ப நிலையில் மஞ்சள் நிறத்தில் நீர் கசிவுள்ள புள்ளிகள் இலையின் நுனியில் தோன்றி கீழ் நோக்கி விளிம்புகளில் பரவும் இதனால் இலைநுனி மற்றும் விளிம்புகள் காய்ந்து விடும். நோயற்ற விதைகளை தேர்வு செய்ய வேண்டும். பரிந்துரை செய்யப்பட்ட அளவு மட்டும் தழைச்சத்தினை இடவேண்டும். நோயின் தாக்குதல் தீவரமாகும் போது ஏக்கருக்கு ஸ்ட்ரெப்டோமைசின் சல்பேட் மற்றும் டெட்ராசைகளின் கலவை 120 கிராம் மற்றும் காப்பர் ஆக்ஸிகுளோரைடு 500 கிராம் கலந்து தெளிக்க வேண்டும் என்றார். இந்நிகழ்ச்சியில் திருவரங்குள வட்டார வேளாண் அலுவலர் அன்பரசன், நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர். பயிற்சிக்கான ஏற்பாடுகளை முதுநிலை ஆராய்ச்சியாளர்களான விஜயசங்கர் மற்றும் சந்தோஷ்குமார் செய்திருந்தனர்.

**சேதுபாவாசத்திரம் பகுதிகளில் வேர்கருகல் நோயால் மக்காச்சோளப்பயிர் பாதிப்பு**

சேதுபாவாசத்திரம், : மக்காச்சோள பயிரை தாக்கும் பூச்சிகளை கட்டுப்படுத்தும் வழிமுறைகள் பற்றி சேதுபாவாசத்திர வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் பெரியசாமி விளக்கமளித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திகுறிப்பில் கூறியுள்ளதாவது; மக்காச்சோள பயிரை தாக்கும் பூச்சிகளில் மிக முக்கமானது தண்டு துளைப்பான், கதிர் துளைப்பான் மற்றும் வேர் கருகல் நூற்புழு ஆகும். தண்டு துளைப்பான் தாக்கிய பயிர்களில் இலைகள் சுரண்டபட்டிருக்கும், நடுக்குருத்து வாடி காய்ந்து இருக்கும். தண்டில் துவாரம் காணப்படும். இவற்றை கட்டுப்படுத்திட விதைத்த 16வது நாள் குயினல்பாஸ்.5ஜி 6கிலோ அல்லது கார்பரில்.4ஜி 8கிலோ குருணை மருந்தினை 20 கிலோ மணலுடன் கலந்து ஒரு ஏக்கர் பரப்பில் உள்ள செடியின் நடுக்குருத்தில் இடவேண்டும்.

குருணை இட தவறும் பட்சத்தில் விதைத்த 20 வது நாள் குயினல்பாஸ்25 இ.சி 400 மில்லி அல்லது கார்பரில் 50 சத நனையும் தூள் 400 கிராம் மருந்தினை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து ஒரு ஏக்கர் பரப்பில் தெளிக்கவேண்டும். தண்டு துளைப்பான் மட்டுமின்றி மூக்குவண்டு மற்றும் அசுவினி பூச்சிகளும் கட்டுப்படுகிறது.

வேர்கருகல் நூற்புழு தாக்கினால் இளம்செடிகள் கருகி காய்ந்துவிடும். இதனை கட்டுப்படுத்த கார்போபியூரான்.3ஜி குருணை மருந்து 12 கிலோவினை ஒரு ஏக்கர் பரப்பில் நடவு குழியில் இடவேண்டும். விதையுடன் இடவேண்டும்.

கதிர் துளைப்பான் தாக்குதலால் பால் பருவ மணிகள் சேதமடைந்திருக்கும். இதனை கட்டுப்படுத்திட கார்பரில் 10 சத மருந்து 10 கிலோ அல்லது கார்பரில் 50 சத நனையும் தூள் மருந்து 400 கிராம் இவற்றில் ஏதேனும் ஒன்றினை பூக்கும் தருணத்தில் ஒரு முறையும் பின்பு 15 நாட்கள் கழித்து ஒரு முறையும் ஒரு ஏக்கர் பரப்பில் தெளிக்க வேண்டும்.

இவ்வாறு அவர் அந்த செய்தி குறிப்பில் தெரிவித்துள்ளார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**கொள்முதல் விலை உயர்வு: ஜெயலலிதாவுக்கு, பால் உற்பத்தியாளர்கள்–முகவர்கள் சங்கம் பாராட்டு**



சென்னை

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தின் பொதுச்செயலாளர் கே.முகமது அலி வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டு இருப்பதாவது:–

முதல்–அமைச்சர் ஜெயலலிதா பசும்பால், எருமைபாலுக்கு ரூ.3 கொள்முதல் விலையை உயர்த்தி அறிவித்ததை வரவேற்கிறோம்.

'கொள்முதல் விலை உயர்வு கூட்டுறவு சங்கங்களுக்கு பால் வழங்கக்கூடிய சுமார் 5 லட்சம் பால் உற்பத்தியாளர்கள் குடும்பங்களும், இதையொட்டி விலை உயர்வு கிடைக்க இருக்கின்ற தனியார் நிறுவனங்களுக்கு பால் வழங்கக்கூடிய சுமார் 10 லட்சம் குடும்பங்களுக்கும் ஓரளவு ஆறுதல் அளிக்கிறது'.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

இதுகுறித்து தமிழ்நாடு பால் முகவர்கள் நலச்சங்கத்தின் மாநில தலைவர் எஸ்.ஏ.பொன்னுசாமி வெளியிட்ட அறிக்கையில், 'ஜனவரி 1–ந்தேதி முதல் ஆவின் நிர்வாகம் கொள்முதல் செய்கின்ற பாலை லிட்டருக்கு ரூ.3 உயர்த்தி வழங்கப்படும் என அறிவித்ததுடன், பொதுமக்களுக்கு பால் விற்பனை விலையை உயர்த்தும் எண்ணம் இல்லை என்றும் அறிவித்துள்ள முதல்–அமைச்சர் ஜெயலலிதாவுக்கு தமிழ்நாடு பால் முகவர்கள் நலச்சங்கம் தனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறது' என்று கூறியுள்ளார்.

**விவசாயிகள் போராட்டம் எதிரொலி: வைகை அணையில் இருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறப்பு**



தேனி

விவசாயிகள் போராட்டம் எதிரொலியாக, வைகை அணையில் இருந்து வினாடிக்கு 1,600 கனஅடி வீதம் பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

<u>வைகை அணை</u>

தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி அருகே உள்ள வைகை அணையின் உச்சநீர்மட்டம் 71 அடி ஆகும். இந்த அணையின் மூலம் 86 ஆயிரத்து 500 ஏக்கர் நிலங்கள் ஒருபோக பாசனவசதி பெறுகின்றன. ஆனால் இந்த ஆண்டு பருவமழை போதிய அளவு பெய்யாமல் ஏமாற்றியதால், வைகை அணை நீர்மட்டம் குறைந்து விட்டது. இதன் எதிரொலியாக வைகை–பெரியாறு பாசன கடைமடை பகுதியான

மதுரை மாவட்டம் மேலூர் பகுதியில் 16 ஆயிரத்து 400 ஏக்கர் பரப்பளவில் தான் நெற்பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டன.

இந்த சாகுபடிக்காக வைகை அணையில் இருந்து கடந்த அக்டோபர் மாதம் 25–ந்தேதி அன்று தண்ணீர் திறக்கப்பட்டது. பின்னர் வடகிழக்கு பருவமழை பொய்த்ததன் எதிரொலியாகவும், முல்லைப் பெரியாறு அணை நீர் இருப்பு குறைய தொடங்கியதாலும் வைகை அணையின் நீர் மட்டம் 'கிடுகிடு'வென குறைந்தது. இதனால் இந்த பாசன பகுதியில் முறைப்பாசனம் அமல்படுத்தப் பட்டது. இதையடுத்து தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்தி தற்போது நெற்கதிர் பால் பிடிக்கும் பருவம் வரையில் நெற்பயிர்களை விவசாயிகள் காத்து வந்துள்ளனர்.

<u>பாசனத்திற்கு தண்ணீர் திறப்பு</u>

இந்த நிலையில் முல்லைப் பெரியாறு மற்றும் வைகை அணையின் நீர்மட்டம் மிகவும் குறைவாக உள்ளதால் வைகை அணையில் இருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறக்க வாய்ப்பு இல்லை என்று பொதுப்பணித்துறையினர் தெரிவித்தனர். இதனால் பால் பிடிக்கும் பருவத்தில் உள்ள பயிர்களை காப்பாற்ற அணையில் இருந்து தண்ணீர் திறக்க வலியுறுத்தி மேலூர் பகுதி விவசாயிகள் நேற்று முன்தினம் திடீரென போராட்டம் நடத்தினர்.

இந்த போராட்டத்தை தொடர்ந்து வைகை அணையில் இருந்து வினாடிக்கு 1,600 கன அடி வீதம்தண்ணீர் திறந்து விட தமிழக அரசு உத்தரவிட்டது. அதன்படி நேற்று காலையில் வைகை அணையில் இருந்து பாசனத்திற்காக வினாடிக்கு 1,600 கனஅடியும், மதுரை நகர குடிநீர் தேவைக்காக வினாடிக்கு 60 கன அடியும் என மொத்தம் 1,660 கன அடிநீர் திறந்து விடப்பட்டது.

<u>விவசாயிகள் நம்பிக்கை</u>

அதேநேரத்தில் இன்னும் எத்தனை நாட்கள் தண்ணீர் திறக்கப்படும் என்பது குறித்து வைகை அணை பொதுப்பணித் துறையினருக்கு தமிழக அரசு தகவல்

தெரிவிக்கவில்லை என்று அதிகாரிகள் தெரிவித்தனர். இதே அளவு நீர் இன்னும் சில தினங்களுக்கு திறக்கப்படும் என்பதால் மேலூர் பகுதியில் கதிர் பால்பிடிக்கும் நிலையில் உள்ள நெற்பயிர்களை காப்பாற்ற முடியும் என்ற நம்பிக்கை விவசாயிகளிடையே ஏற்பட்டுள்ளது.

மேலும் இந்த தண்ணீர் அணையின் பிரதான மதகு வழியாக திறக்கப்படாமல் வைகை அணை நுண்புனல் மின் நிலையம் வழியாக திறக்கப்படுவதால் இந்த மின் நிலையத்தில் 144 மெகாவாட் மின்உற்பத்தி தொடங்கி உள்ளது குறிப்பிடத்தக்கது.

<u>நீர்மட்டம்</u>

வைகை அணை நீர்மட்டம் நேற்று 45.28 அடியாக காணப்பட்டது. அணைக்கு வினாடிக்கு 120 கன அடி நீர்மட்டுமே வரத்து காணப்படுகிறது. அணையில் 1,432 மில்லியன் கன அடிநீர் இருப்பு உள்ளது.

தற்போதைய நிலையில் 3 நாட்களுக்கு தண்ணீர் கூடுதலாக திறக்கப்படுவதால் அணை நீர்மட்டம் மேலும் குறையும் வாய்ப்பு உள்ளது. கோடை மழை பெய்யாவிட்டால் தேனி, திண்டுக்கல், மதுரை ஆகிய தென் மாவட்டங்களில் வருகிற ஏப்ரல், மே மாதங்களில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் உருவாகி உள்ளது.

**சர்க்கரை இறக்குமதிக்கு மத்திய அரசு ஏன் தடை விதிக்கவில்லை? கருணாநிதி கேள்வி**

சென்னை,

போதுமான அளவிற்கு சர்க்கரை கையிருப்பு இருந்தும் சர்க்கரை இறக்குமதிக்கு மத்திய அரசு ஏன் தடை விதிக்கவில்லை என்று கருணாநிதி கேள்வி எழுப்பியுள்ளார்.
மேலும் மத்திய அரசிடம் போதுமான அளவுக்கு சர்க்கரை கையிருப்பு உள்ளது என்ற போதிலும், சர்க்கரை இறக்குமதிக்கு மத்திய அரசு தடை விதிக்காமல்

உள்ளது. சர்க்கரை இறக்குமதிக்கான வரியையும் உயர்த்த முன்வராமல் உள்ளது. உத்தரப்பிரதேச மாநிலத்தில் கரும்புக்கான விலை, டன்னுக்கு 2,800 ரூபாய். இந்த விலையையே உயர்த்தக்கோரி, அங்குள்ள விவசாயிகள் போராடி வருகின்றனர் என்று தி.மு.க.தலைவர் கூறியுள்ளார்.

**முதல்–அமைச்சர் ஜெயலலிதா அறிவிப்பு; பால் கொள்முதல் விலை லிட்டருக்கு ரூ.3 உயர்வு, 22½ லட்சம் பேர் பயன் பெறுவார்கள், பொதுமக்களுக்கான பால் விற்பனை விலையில் மாற்றம் இல்லை**



பால் கொள்முதல் விலையை லிட்டருக்கு ரூ.3 உயர்த்தி முதல்–அமைச்சர் ஜெயலலிதா உத்தரவிட்டு உள்ளார். இதன்மூலமாக 22½ லட்சம் பால் உற்பத்தியாளர்கள் பயன் பெறுவார்கள். அதே நேரம் பொதுமக்களுக்கான பால் விற்பனை விலையில் மாற்றம் இல்லை என்று அறிவிக்கப்பட்டு உள்ளது. சென்னை,

தமிழக முதல்–அமைச்சர் ஜெயலலிதா வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

<u>முதல்–அமைச்சர் ஆய்வு</u>

தமிழக அரசின் நிறுவனமான ஆவின் நிறுவனத்திற்கு வழங்கப்படும் பாலின் கொள்முதல் விலையை உயர்த்தித் தர வேண்டும் என்ற பால் உற்பத்தியாளர்கள் நலச்சங்கத்தினர் கோரிக்கையினை பரிசீலிக்கும் பொருட்டு, நேற்று தலைமைச்செயலகத்தில் எனது தலைமையில் ஓர் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் அமைச்சர்கள் ஓ.பன்னீர்செல்வம், நத்தம் இரா.விசுவநாதன், கே.பி.முனுசாமி, இரா.வைத்திலிங்கம், மாதவரம் வி.மூர்த்தி, ஆவின் நிறுவனத்தலைவர் அ.மில்லர், அரசு தலைமைச்செயலாளர் ஷீலா பாலகிருஷ்ணன், நிதித்துறை முதன்மைச்செயலாளர் இரா.சண்முகம், கால்நடை பராமரிப்பு மற்றும் மீனவளத்துறை செயலாளர் எஸ்.விஜயகுமார், ஆவின் நிறுவன மேலாண்மை இயக்குனர் சுனில் பாலிவால் மற்றும் அரசு உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

<u>கொள்முதல் விலை உயர்வு</u>

இந்த கூட்டத்தில் நடைபெற்ற விரிவான விவாதத்திற்குப்பின், பசுந்தீவனம் மற்றும் உலர் தீவனம் ஆகியவற்றின் விலை, பணியாளர்களின் சம்பளம், கறவை மாடுகளின் விலை மற்றும் மருத்துவச்செலவு ஆகியவற்றை கணக்கில் கொண்டும், அண்டை மாநில கூட்டுறவு பால் சங்கங்களும், தனியார் பால் நிறுவனங்களும் பாலின் விலையையும், பால் கொள்முதல் விலையையும் உயர்த்தியுள்ளதை கருத்தில் கொண்டும், பால் உற்பத்தியாளர்களின் கோரிக்கையில் உள்ள நியாயத்தினை கருத்தில் கொண்டும், பால் கொள்முதல் விலையை உயர்த்தித்தர நான் உத்தரவிட்டுள்ளேன்.

இதன்படி, பசும் பாலுக்கான கொள்முதல் விலை லிட்டர் ஒன்றுக்கு 3 ரூபாயாகவும், எருமைப்பாலுக்கான கொள்முதல் விலை லிட்டர் ஒன்றுக்கு 3 ரூபாயாகவும் உயர்த்தி வழங்கப்படும். இந்த பால் கொள்முதல் விலை உயர்வு ஜனவரி 1–ந்தேதி முதல் அமலுக்கு வரும்.

<u>22½ லட்சம் பேர் பயன்அடைவார்கள்</u>

இந்த பால் கொள்முதல் உயர்வினையடுத்து, பசும்பால் கொள்முதல் விலை லிட்டர் ஒன்றுக்கு 20 ரூபாயிலிருந்து 23 ரூபாயாகவும், எருமைப்பால் கொள்முதல் விலை லிட்டர் ஒன்றுக்கு 28 ரூபாயிலிருந்து 31 ரூபாயாகவும் உயர்த்தி வழங்கப்படும்.

இதன் பயனாக தமிழகத்தில் கூட்டுறவு அமைப்பின் கீழ் உள்ள சுமார் 22½ லட்சம் பால் உற்பத்தியாளர்கள் பயன் அடைவார்கள்.

இந்த கொள்முதல் விலை உயர்வால் ஓர் ஆண்டிற்கு 273 கோடியே 75 லட்சம் ரூபாய் அளவுக்கு பால் உற்பத்தியாளர்கள் பயன் அடைவர்.

பால் விலை உயராது

கொள்முதல் விலை உயர்த்தப்பட்டாலும், நுகர்வோர் நலனை கருத்தில் கொண்டு, பால் விற்பனை விலை உயர்த்தப்படமாட்டாது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு முதல்–அமைச்சர் கூறி உள்ளார்.

**கரும்பிற்கான கொள்முதல் விலையை உயர்த்தக்கோரி தமிழக விவசாயிகள் சங்கத்தினர் ஆர்ப்பாட்டம்**

தர்மபுரி, -

கரும்பிற்கான கொள்முதல் விலையை உயர்த்தக்கோரி தமிழக விவசாயிகள் சங்கத்தினர் தர்மபுரி கலெக்டர் அலுவலகம் முன்பு நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கரும்புக்கு கூடுதல் விலை

தமிழக விவசாயிகள் சங்கத்தின் சார்பில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தர்மபுரி கலெக்டர் அலுவலகம் முன்பு நேற்று ஆர்ப்பாட்டம் நடந்தது. ஆர்ப்பாட்டத்திற்கு சங்கத்தின் மாநிலத்தலைவர் எஸ்.ஏ.சின்னசாமி தலைமை தாங்கினார். மாவட்ட தலைவர் செங்கோடன், செயலாளர்கள் சக்திவேல், குப்புசாமி உள்ளிட்ட நிர்வாகிகள் முன்னிலை வகித்தனர். மாநில பொதுச் செயலாளர் சுந்தரம், பொருளாளர் வேலுமணி, துணைத்தலைவர் ஆறுமுகம் மற்றும் நிர்வாகிகள் கோரிக்கைகளை விளக்கி பேசினார்கள்.

கரும்பு சாகுபடிக்கான உற்பத்தி செலவு உயர்வு, கடுமையான வறட்சி ஆகியவற்றை கருத்தில் கொண்டு கரும்பிற்கான கொள்முதல் விலையை மறுபரிசீலனை செய்து ஒரு டன்னுக்கு ரூ.4 ஆயிரமாக உயர்த்தி அறிவிக்க தமிழகஅரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். பால் கொள்முதல் விலையை 1 லிட்டர் பசும்பாலுக்கு ரூ.25-ஆகவும், எருமைப்பாலுக்கு ரூ.35 ஆகவும் உயர்த்த வேண்டும். கர்நாடகம், புதுச்சேரி மாநிலங்களை போல் உற்பத்தி மானியமாக லிட்டருக்கு ரூ.4 வழங்க வேண்டும்.

<u>நிலுவைத்தொகை</u>

கிராம கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்களை வலுப்படுத்தும் வகையில் பணியாளர்களை பணிநிரந்தரம் செய்து கிராம சங்கங்களுக்கு 10 சதவீத விளிம்புத் தொகை வழங்க வேண்டும். தர்மபுரி மாவட்ட கூட்டுறவு ஒன்றியம் கிராம சங்கங்களுக்கு வழங்க வேண்டிய பால் நிலுவைத் தொகை ரூ.7 கோடியை உடனடியாக வழங்க வேண்டும். விவசாய விளைநிலங்கள் வழியாக கெயில் நிறுவனம் கியாஸ் சிலிண்டர் குழாய்களை பதிக்கும் திட்டத்தை கைவிட வேண்டும். தேசிய ஊரக வேலை உறுதிதிட்ட பணியாளர்களை விவசாயத்திற்கு பயன்படுத்த அனுமதிக்க வேண்டும்.

கோமாரிநோய் தாக்கி உயிரிழந்த கால்நடைகளுக்கு தலா ரூ.25 ஆயிரம் நிவாரணம் வழங்க வேண்டும் என்பவை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் இந்த ஆர்ப்பாட்டத்தில் வலியுறுத்தப்பட்டன. இதில் சங்க நிர்வாகிகள், விவசாயிகள் திரளாக கலந்து கொண்டு கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பினார்கள். ஆர்ப்பாட்டத்தின் முடிவில் கோரிக்கைகளை வலியுறுத்தி கலெக்டரிடம் மனு அளிக்கப்பட்டது.

**விவசாயிகளுக்கு பயிர் காப்பீடு வழங்கக்கோரி தி.மு.க. விவசாய அணி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்**

நாகப்பட்டினம், விவசாயிகளுக்கு பயிர் காப்பீட்டுத் தொகை வழங்கக்கோரி தி.மு.க. விவசாயி அணி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நாகையில் விஜயன் எம்.பி. தலைமையில் நடந்தது.

**<u>கண்டன ஆர்ப்பாட்டம்</u>**

நாகை மாவட்ட தி.மு.க. விவசாய அணி சார்பில், விவசாயிகளுக்கு பயிர் காப்பீட்டுத் தொகை வழங்கக் கோரி நாகை மாவட்ட கலெக்டர் அலுவலகம் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு நாகை மாவட்ட தி.மு.க. செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன் எம்.பி. தலைமை தாங்கினார். முன்னாள் மாவட்ட செயலாளர் அம்பலவாணன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் தங்கையா, குத்தாலம் கல்யாணம், ஒன்றிய செயலாளர் ராசேந்திரன், நகர செயலாளர் போலீஸ் பன்னீர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட தி.மு.க. விவசாயிகள் அணி அமைப்பாளர்கள் முருகையன், மணிவண்ணன் ஆகியோர் வரவேற்றனர்.

**<u>விவசாயிகளுக்கு பயிர் காப்பீடு</u>**

ஆர்ப்பாட்டத்தில் விவசாயிகளுக்கு பயிர் காப்பீட்டுத் தொகை வழங்காத தமிழக அரசை கண்டித்தும், பயிர் காப்பீட்டுத் தொகையை உடனடியாக வழங்கக் கோரியும் கோஷங்கள் எழுப்பப்பட்டன. இதில் காவேரி பாசனதாரர் முன்னேற்றச் சங்க பொதுச் செயலாளர் கோபி.கணேசன், ஒன்றிய செயலாளர்கள் கீழ்வேளூர் கோவிந்தராஜன், திருமருகல் செல்வம், கீழையூர் சார்லஸ், மயிலாடுதுறை மூர்த்தி, செம்பனார்கோவில் ஞானவேல், கொள்ளிடம் ரவிக்குமார், சீர்காழி அன்பழகன், தலைஞாயிறு சரவணக்குமார், வேதாரண்யம் ஆனந்தராசு உள்பட ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்.

**ஆற்றில் தொடர்ந்து காவிரி தண்ணீர் திறக்க வலியுறுத்தி நாகுடியில் விவசாயிகள் சாலை மறியல்**

அறந்தாங்கி, -

ஆற்றில் தொடர்ந்து காவிரி தண்ணீர் திறக்க வலியுறுத்தி நாகுடியில் விவசாயிகள் சாலை மறியல் செய்தனர். இதனால் 1 மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

<u>சாலை மறியல்</u>

அறந்தாங்கியை அடுத்த நிலையூர், செல்லப்பன் கோட்டை, காட்டுக்குடி, பானாவயல் உள்ளிட்ட 5 கிராமங்களில் சாகுபடி செய்யப்பட்டுள்ள நெற்பயிரைக் காப்பாற்ற, மகாகணபதிபுரம் வாய்க்காலில் தொடர்ந்து காவிரி நீர் திறக்க வலியுறுத்தி நாகுடியில் விவசாயிகள் சாலை மறியலில் ஈடுபட்டனர்.

போராட்டத்திற்கு நிலையூர் சரவணன் தலைமை தாங்கினார். தினையாகுடி கருப்பையா முன்னிலை வகித்தார். மறியல் போராட் டத்தில் செல்லப்பன் கோட்டை வீரப்பன், நிலையூர் முத்துக்குமார், நேரு உள்ளிட்ட 300-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

<u>போக்குவரத்து பாதிப்பு</u>

மறியலில் ஈடுபட்ட விவசாயிகளுடன் அறந்தாங்கி கோட்டாட்சியர். துரை, தாசில்தார்கள் அறந்தாங்கி தவச்செல்வம், மண மேல்குடி செல்வநாயகம், பொதுப்பணித்துறை அதிகாரிகள் அன்பரசு, தென்னரசு, போலீஸ் இன்ஸ்பெக்டர் பாலாஜி உள்ளிட்டோர் பேச்சுவார்த்தை நடத்தினர். பேச்சு வார்த்தையில் உடன்பாடு ஏற்பட்டதை அடுத்து விவசாயிகள் போராட்டத்தை கைவிட்டு கலைந்து சென்றனர். விவசாயிகளின் மறியல் போராட்டம் காரணமாக அறந்தாங்கி-கட்டுமாவடி சாலையில் சுமார் ஒரு மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

**கரும்பு கொள்முதல் விலையை கூடுதலாக வழங்க வேண்டும் ம.தி.மு.க. கூட்டத்தில் வலியுறுத்தல்**

பெரம்பலூர், -

கரும்பு கொள்முதல் விலையை கூடுதலாக வழங்க பெரம்பலூர் மாவட்ட ம.தி.மு.க. கூட்டத்தில் வலியுறுத்தப் பட்டது.

<u>ஆலோசனைக் கூட்டம்</u>

பெரம்பலூரில் மாவட்ட ம.தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் நடந்தது. கூட்டத்திற்கு மாவட்ட அவைத் தலைவர் செல்லக்கதிர்வேல் தலைமை தாங்கினார். மாவட்ட துணை செயலாளர் செராபுதீன், முன்னிலை வகித்தார். நகர செயலாளர் ராஜேந் திரன் வரவேற்றார். மாவட்ட செயலாளர் துரைராஜ் சிறப்புரையாற்றினார். இதில் கட்சியின் செயல்பாடுகள், தேர்தல் பணி போன்றவை குறித்து ஆலோசனை செய்யப்பட்டன.

<u>கரும்பு கொள்முதல் விலை</u>

கூட்டத்தில் வரும் பாராளுமன்ற தேர்தலில் ம.தி.மு.க. கூட்டணியின் வேட்பாளர் வெற்றிபெற முழுமையாக செயல்படுவது, துணை அமைப்புகளின் நிர்வாகிகளை நியமனம் செய்வது, கரும்பு டன் ஒன்றுக்கு கொள்முதல் விலையை அரசு கூடுதலாக வழங்கவேண்டும், பெரம்பலுர் மாவட்டத்தில் கோமாரி நோயை கட்டுப்படுத்தவும், நோயினால் இறந்த மாடுகளுக்கு நஷ்ட ஈடும் வழங்க வேண்டும்.

<u>புதிய பஸ்</u>

பெரம்பலூரிலிருந்து நொச்சியம், செல்லியம்பாளையம், நடுவலூர், கீழக்கணவாய் வழியாக புதிய வழித்தடத்தில் அரசு பஸ் இயக்க வேண்டும், பருவமழை பொய்த்துவிட்டதால் விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும், தமிழ்நாட்டில் அரசியல் மாற்றத்தை ஏற்படுத்த மாணவர்களிடமும்,

இளைஞர்களிடமும், நடுநிலையாளர்களிடமும் விழிப்புணர்வு ஏற்படுத்த பிரசாரம் மேற்கொள்வது,

<u>அரசுக்கு நன்றி</u>

வேப்பந்தட்டையில் அரசு கலைக்கல்லூரி அமைப்பதற்கு தமிழக அரசுக்கு நன்றி தெரிவிப்பது.

மேற்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இதில் மாவட்ட பொருளாளர் ஜெயசீலன் ஒன்றிய செயலாளர்கள் முத்து, ரெங்கராஜ், சுப்புராயன், தியாகராஜன், சிகாமணி, ராஜா, பொறியாளர் படைகாத்து, ஜெயக்குமார் உள்பட பலர் கலந்து கொண்டனர். மாவட்ட இளைஞரணி துணை செயலாளர் நீலமேகம் நன்றி கூறினார்.

**ஆண்டிப்பட்டி பகுதியில் கால்நடை தீவனமாக மாறும் மானாவாரி பயிர்கள்**



ஆண்டிப்பட்டி அருகே க.விலக்கு பகுதியில் வளர்ச்சி அடையாத சோளப்பயிரை கால்நடை தீவனமாக பயன்படுத்த அறுவடை செய்யும் தொழிலாளர்கள்.

ஆண்டிப்பட்டி, -

பருவமழை ஏமாற்றியதால் மானாவாரி நிலங்களில் சாகுபடி செய்யப்பட்ட சோளப்பயிரை விவசாயிகள் கால்நடைகளுக்கு தீவனமாக பயன்படுத்த தொடங்கி உள்ளனர்.

<u>மானாவாரி பயிர்கள்</u>

தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி சுற்றுவட்டாரத்தில் உள்ள சண்முகசுந்தரபுரம், ரெங்க சமுத்திரம், முத்தனம்பட்டி, க.விலக்கு, பிராதுகாரன் பட்டி ஆகிய

பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் மானாவாரி நிலங்கள் உள்ளது. இந்த பகுதிகளில் மானாவாரி பயிராக சோளம் அதிகமாக பயிரிடப் படுகிறது.

இந்நிலையில் கடந்த சில மாதங்களாக போதுமான மழை பெய்யாததால் பயிரிடப் பட்டு இருந்த மானாவாரி பயிர்கள் அனைத்தும் வளர்ச்சி அடையாமல் கருகிவிட்டது. ஒருசில பகுதிகளில் கருகத் தொடங்கிய பயிர்களை காப்பாற்ற மழை பெய்யுமா? என்று விவசாயிகள் எதிர்பார்த்து காத்திருக்கின்றனர்.

<u>கால்நடை தீவனம்</u>

ஆனால் வடகிழக்குப் பருவமழை காலம் தற்போது முடிவடைந்துவிட்டது. இனியும் மழை பெய்யாது என்று எண்ணிய விவசாயிகள் வளர்ச்சி அடையாத மானவாரி பயிர்களை கால்நடைகளுக்கு உணவாக அளித்து வருகின்றனர். க.விலக்கு பகுதிகளில் பயிரிடப்பட்டு இருந்த சோளப்பயிர்களை கால்நடைகளுக்கு தீவனமாக பயன்படுத்த அறுவடை செய்து வருகின்றனர்.

**பாசனத்திற்க்காக வைகை அணையில் இருந்து தண்ணீர் திறப்பு**



தேனி

முல்லைப் பெரியாறு மற்றும் வைகை அணையின் நீர்மட்டம் மிகவும் குறைவாக உள்ளதால் வைகை அணையில் இருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறக்க வாய்ப்பு இல்லை என்று பொதுப்பணித்துறையினர் தெரிவித்தனர். இதனால் பால் பிடிக்கும்

பருவத்தில் உள்ள பயிர்களை காப்பாற்ற அணையில் இருந்து தண்ணீர் திறக்க வலியுறுத்தி மேலூர் பகுதி விவசாயிகள் நேற்று  திடீரென போராட்டம் நடத்தினர்.

இந்த போராட்டத்தை தொடர்ந்து வைகை அணையில் இருந்து வினாடிக்கு 1,600 கன அடி வீதம்தண்ணீர் திறந்து விட தமிழக அரசு உத்தரவிட்டது. அதன்படி இன்று காலையில் வைகை அணையில் இருந்து பாசனத்திற்காக வினாடிக்கு 1,600 கனஅடியும், மதுரை நகர குடிநீர் தேவைக்காக வினாடிக்கு 60 கன அடியும் என மொத்தம் 1,660 கன அடிநீர் திறந்து விடப்பட்டது.

**போதிய மழை இல்லாததால் நெற்பயிரை காப்பாற்ற போராடும் விவசாயிகள்**



பனைக்குளம், -

போதிய மழை இல்லாததால் வயல்களுக்கு நீர் பாய்ச்சி நெற்பயிர்களை காப்பாற்றும் முயற்சியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

<u>மழை</u>

ராமநாதபுரம் மாவட்டத்தில் கடந்த 3 ஆண்டுகளாக பருவமழை சரிவர பெய்யாமல் விவசாயிகளையும், பொது மக்களையும் வசித்து வருகிறது. இதனால் இம்மாவட்டத்தில் உள்ள நீர் நிலைகளில் எல்லாம் குறைந்தளவே தண்ணீர் உள்ளது. மேலும் குடி நீருக்காக பொதுமக்கள் கடும் அவதிப்படும் சூழ்நிலையும் இருந்து வருகிறது. இந்த ஆண்டு ராமநாதபுரம் மாவட்ட மக்கள் பருவமழை நன்றாக பெய்யும் எதிர்பார்த்து காத்திருந்தனர்.

ஆனால் அவ்வப்போது மழை பெய்தாலும் போதியளவு மழை பெய்யவில்லை. தொடக்கத்தில் பெய்த மழையை நம்பி விவசாய பணிகளை தொடங்கினர். அதன்பிறகு திடீர் திடீரென பெய்த மழையால் நெற்பயிர்கள் நன்கு வளர்ந்து காணப்பட்டது. இந்த நிலையில் தற்போது வயல்களில் ஈரம் காய்ந்துவிட்டதால் பயிர்களுக்கு தேவையான தண்ணீர் கிடைக்காமல் அவை கருகும் நிலை ஏற்பட்டுள்ளது.

நெற்பயிர்கள்

ராமநாதபுரம் மாவட்டத்தில் அத்தியூத்து கிராமத்தில் சுமார் 20 ஏக்கரில் நெல் விவசாயம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த பயிர்கள் தண்ணீர் இல்லாததால் கருகும் அபாயம் ஏற்பட்டுள்ளதை தொடர்ந்து அப்பகுதி விவசாயிகள் ஓடைகளில் உள்ள தண்ணீரை மோட்டார் வைத்தும், ஏற்றம் இறைத்தும் வயல்களுக்கு பாய்ச்சி வருகின்றனர். இதேபோல தேர்போகி கிராமத்திலும் சுமார் 50 ஏக் கரில் நெல் விவசாயம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த பயிர்கள் அனைத்தும் தண்ணீர் இல்லாமல் கருகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இதுதவிர மண்டபம் யூனியன் பகுதிக்கு உட்பட்ட வாலாந்தரவை, வழுதூர், அய்யன் கோவில், உச்சிப்புளி, பூமாலைவலசை, தாம ரைக்குளம், ரெட்டையூரணி உள்பட பல்வேறு பகுதிகளிலும் இதேபோன்ற நிலை உள்ளது. தற்போது பயிர்களில் நெல்மணிகள் பரிந்து வரும் நிலையில் தண்ணீர் இல்லாமல் அவை பதராகிவிடுமோ? என்று விவசாயிகள் அஞ்சுகின்றனர். இதையடுத்து பயிர்களை காப்பாற்ற மழை பெய்ய வேண்டும் என்று அனைத்து பகுதிகளிலும் வழிபாட்டு தலங்களில் சிறப்பு பிரார்த்தனை செய்து வருகின்றனர்.

**கன்னியாகுமரியில் பயங்கர கடல் சீற்றம்: படகு போக்குவரத்து ரத்து**



கன்னியாகுமரி, கன்னியாகுமரியில் நேற்று பயங்கர கடல் சீற்றம் ஏற்பட்டது. இதனால் படகு போக்குவரத்து ரத்து செய்யப்பட்டது.

<u>கடல் சீற்றம்</u>

கன்னியாகுமரிக்கு தினமும் ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வந்து செல்வது வழக்கம். விடுமுறை தினமான நேற்று ஏராளமான சுற்றுலாப் பயணிகளும், அய்யப்ப பக்தர்களும் கன்னியாகுமரிக்கு வந்திருந்தனர். அவர்கள் கடலில் இறங்கி குளித்து கொண்டிருந்தனர்.

அப்போது திடீரென கடல் சீற்றம் ஏற்பட்டது. கடலுக்குள் பயங்கர சூறைக்காற்று வீசியதால் சுமார் 10 முதல் 15 அடி உயரத்திற்கு ஆக்ரோஷமாக அலைகள் எழுந்து வந்து கரையில் மோதின. இதனை பார்த்து கடலில் குளித்து கொண்டிருந்த சுற்றுலாப் பயணிகளும், அய்யப்ப பக்தர்களும் அலறியடித்து கொண்டு கடற்கரை பகுதியில் இருந்து ஓடினர். தொடர்ந்து கடல் சீற்றத்துடன் காணப்பட்டதால் கடலில் குளிக்க தடை விதிக்கப்பட்டது.

<u>படகு போக்குவரத்து ரத்து</u>

மேலும் விவேகானந்தர் பாறை மற்றும் திருவள்ளுவர் சிலைக்கு படகு போக்குவரத்தும் ரத்து செய்யப்பட்டது.

படகில் பயணம் செய்வதற்காக டிக்கெட் வாங்க காலை 5 மணி முதல் ஏராளமான சுற்றுலாப் பயணிகளும் அய்யப்ப பக்தர்களும் நீண்ட வரிசையில் காத்து நின்றனர். படகு போக்குவரத்து ரத்து செய்யப்பட்டதால் அவர்கள் அனைவரும் ஏமாற்றத்துடன் திரும்பி சென்றனர்.

கன்னியாகுமரியை போன்று ஆரோக்கியபுரம், சின்ன முட்டம், கோவளம், புதுகிராமம், சிலுவைநகர் உள்ளிட்ட கடலோர கிராமங்களிலும் கடல் சீற்றத்துடன் காணப்பட்டதால் மீன்பிடி தொழில் பாதிக்கப்பட்டது.

தி இந்து
தமிழால் இணைவோம்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## நீலகிரியில் நடப்பாண்டுக்கான ஏலம் நிறைவு: தேயிலைத்தூள் விலை ரூ.73.90

நடப்பாண்டுக்கான தேயிலை ஏலம் நிறைவில், தேயிலைத் தூளின் சராசரி விலை ரூ.73.90-ஆக இருந்தது.

கென்யா, உகாண்டா, இந்தியா, இலங்கை, வங்கதேசம், டான்சான்யா, இந்தோனேசியா உள்ளிட்ட நாடுகளில் தேயிலை உற்பத்தி செய்யப்படுகிறது. இந்தியாவில் அசாம், நீலகிரி, வயநாடு மற்றும் கர்நாடகாவில் தேயிலை அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது.

இந்தாண்டு பருவநிலை மாற்றம், போதிய மழையின்மை காரணங்களால், உலகளவில் தேயிலைத் தூள் உற்பத்தி குறைந்துள்ளது. இந்தியாவில் சி.டி.சி., ஆர்தோடக்ஸ் ரக தேயிலைத் தூள் உற்பத்தி செய்யப்படுகிறது. ரஷ்யா, பாகிஸ்தான் நாடுகள் அதிகளவில் தேயிலை இறக்குமதி செய்கின்றனர். பாகிஸ்தான் 12 சதவீதத்துடன், இறக்குமதியில் 2-ம் இடத்தில் உள்ளது. இந்நிலையில், கென்யாவின் தேயிலை உற்பத்தி 3 சதவீதம் உயர்ந்த நிலையில், பாகிஸ்தான் அங்கு கொள்முதல் செய்து வருகிறது. இதனால் இந்தியாவிலிருந்து பாகிஸ்தான் கொள்முதல் செய்யும் தேயிலையின் அளவு குறைந்துள்ளது. இதனால் ஏல மையங்களில் தேயிலைத் தூள் தேக்கமடைந்து வருகின்றன.

இந்தாண்டு மார்ச் 26-ம் தேதி குன்னூர் தேயிலை வர்த்தகர்கள் சங்க ஏல மையத்தில், தேயிலைத் தூளின் சராசரி விலை அதிகபட்சமாக ரூ.110.70 ஆகவும், பின்னர் ரூ.100-க்கு கீழாகவும் குறைந்தது. அதேசமயம் மார்ச் 8-ம் தேதி ஒரு கிலோ தேயிலைத் தூளின் சராசரி விலை ரூ.104.11-ஆக இருந்தது. அதன் பின்னர் சராசரி விலையில் வீழ்ச்சி ஏற்பட்டது.

இந்தாண்டு குன்னூர் தேயிலை வர்த்தகர்கள் ஏல மையத்தில், தேயிலைத் தூள் கிலோவுக்கு சராசரி விலை ரூ.73.90-ஆக இருந்தது. இதைத்தொடர்ந்து இந்தாண்டுக்கான தேயிலை ஏலம் முடிவடைந்தது.

கிறிஸ்துமஸ், புத்தாண்டு விடுமுறைக்கு பின், அடுத்தாண்டுக்கான ஏலம் ஜனவரி 2-ம் தேதி நடைபெறும். கடந்த வாரத்தைவிட சிறிது முன்னேற்றம் காணப்பட்டாலும், ரூ.1.47 கோடி மதிப்பிலான தேயிலைத் தூள் விற்பனையாகாமல் தேக்கமடைந்துள்ளது.

Keywords: தேயிலை விலை, தேயிலை ஏலம், தேயிலைத் தூள், நீலகிரி தேயிலை

### மீனவர்கள் பிரச்சினையில் அரசுக்கு கவலையில்லை: திமுக சாடல்

நாகை மீனவர்களின் உண்ணாவிரதம் குறித்து, அதிமுக அரசு கவலைப்படவில்லை என்று திமுக குற்றம்சாட்டியுள்ளது.

இதுகுறித்து திமுக தலைமைக் கழகம் வெளியிட்ட அறிக்கையில், 'இலங்கைக் கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்ட தமிழக மீனவர்களை மீட்கக் கோரி, நாகப்பட்டினம் பகுதியில் வாழும் கிராம மக்கள் கடந்த இரண்டு, மூன்று நாட்களாக உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர்.

இலங்கைக் கடற்படையினரால் சிறை பிடித்துச் செல்லப்பட்ட தமிழக மீனவர்கள் 210 பேரை, அவர்களுடைய படகுகளுடன் மீட்டு வர வேண்டும் என்று வலியுறுத்தி, இந்த உண்ணாவிரதப் போராட்டம் நடைபெறுகிறது. இதைப் பற்றி அ.தி.மு.க., அரசு கவலைப்படுவதாகத் தெரியவில்லை.

இந்நிலையில், உண்ணாவிரதம் இருக்கும் மீனவர்களைச் சந்தித்து பேசுவதற்காக, தி.மு.க., தலைமையின் சார்பில், நாடாளுமன்றக் குழு தி.மு.க., தலைவர் டி.ஆர். பாலுவை நேரில் செல்லுமாறு, தி.மு.க., தலைவர் கருணாநிதி அறிவுறுத்தியுள்ளார்' என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## "இன்னைக்கு மழை பெய்யுமா?"

"இன்னைக்கு மழை பெய்யும்னு வானிலை ஆய்வு மையம் சொல்லியிருக்கு. அப்படின்னா நிச்சயம் மழை பெய்யாது" - பலரும் இப்படிச் சொல்வதைக் கேட்டிருக்கலாம். வானிலை முன்னறிவிப்பு பெரும்பாலான நேரம் பொய்த்துப் போவது போலிருக்கலாம். ஆனால், விமானம், கப்பல், விவசாயம் போன்ற எண்ணற்ற துறைகள், வானிலைத் தகவல்கள் இல்லாவிட்டால் இயங்கவே முடியாது. தெற்கில் உள்ள கடக ரேகைக்கும் வடக்கில் உள்ள மகர ரேகைக்கும் சூரியன் மாறி மாறிச் சென்று திரும்பும்போது காலநிலை மாற்றங்கள் ஏற்படுகின்றன. சூரியன் வடக்கே நகர்ந்தால் ‘வெப்ப மண்டல ரேகை’ எனப்படும் ரேகையும் அதனுடன் நகரும். தென்மேற்குப் பருவக் காற்று அந்த ரேகையைப் பின்தொடர்கிறது. இந்த ரேகை ஜூன் முதல் தேதி கேரளத்தில் தொடங்குகிறது. ‘வெப்ப மண்டல ரேகை’ நகரும்போது, சூறாவளிப் புயல்களும் உருவாகின்றன.

சூரிய வெப்பத்தால் கடல் நீர் நீராவியாகும். அந்த நீராவி புயல் மேகங்களாகவும், மழை மேகங்களாகவும், பனியாகவும் மாறும். சாதாரணமாகக் காற்று மண்டலத்தில் தாழ்வு நிலை (depression) ஏற்படும்போது மழை உருவாகிறது. சுருக்கமாகச் சொன்னால் கடலுக்கும் காற்று மண்டலத்துக்கும் இடையிலான ஊடாட்டமே வானிலை மாறுபாடுகள். வானிலை மாறுபாடுகள் தினசரி மாறக்கூடியவை. அதை முன்கூட்டியே அறிவதற்கு நிலம் சார்ந்த குறிப்புகளும், காற்று மண்டலக் குறிப்புகளும் அவசியம். இந்தத் தகவல்களை உலகம் முழுவதும் சேகரித்து ஒப்பிட்டால் மட்டுமே, வானிலை மாறுபாடுகள் குறித்து ஆய்வு செய்ய முடியும்.

### வானிலை ஆய்வு

பல்வேறு ஆண்டுகளுக்குத் தொகுக்கப்பட்ட வானிலைத் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு குறிப்பிட்ட ஓர் இடம், மண்டலத்தின் வானிலை பற்றி ஆய்வு செய்வதே வானிலை ஆய்வு. இதன் மூலம் ஒரு பகுதியின் பொதுவான வானிலை நிலைமையைக் கணிக்கலாம்.

வெப்ப நிலையை அளக்கப் பயன்படும் வெப்பமானி, காற்றின் வேகத்தை அளக்கப் பயன்படும் வேகமானி போன்றவை வானிலை தகவல்களைச் சேகரிக்கப் பயன்படுத்தப்படும் எளிய கருவிகள். வானிலை ஆய்வுக் கூடங்கள், தானியங்கி ஆய்வுக் கூடங்கள், டாப்ளர் ராடார்கள் போன்றவையும் வானிலையைக் கணிக்கப் பயன்படுத்தப்படுகின்றன.

பழைய காலத்துக்கு மாறாகத் தற்போது செயற்கைக்கோள்கள் செலுத்தப்படுவதால், புவியி யல் ரீதியில் வானிலை ஆய்வுகளை மேற்கொள்ள முடிகிறது. உலக நாடுகளின் வானிலை ஆய்வு மையங்கள், நவீனத் தகவல்தொடர்பு சாதனங்கள் மூலம் தங்கள் கணிப்புகளைப் பரஸ்பரம் பரிமாறிக்கொள்கின்றன. இதை வானிலை ஆய்வாளர்கள் பகுத்து ஆராய்ந்து, முன்னறிவிப் புகளை வெளியிடுகிறார்கள்.

விமானம், கப்பல்கள் போன்ற நவீனப் போக்குவரத்து வசதிகள் முழுவதும் வானிலை முன்னறிவிப்புகளைச் சார்ந்தே இயங்கிவருகின்றன. பருவ மழை, வறட்சி பற்றி முன்கூட்டியே தெரிந்தால்தான், விவசாயிகளால் விவசாயத்தைக் காப்பாற்ற முடியும். குறிப்பாக, நம் நாட்டின் விவசாயம் பருவ மழையை நம்பியே உள்ளது. எனவே, அதில் ஏற்படும் சிறிய மாறுதல்களும் மிக முக்கியமானவையே.

சாதாரண மக்களுக்கும் புயல், வெள்ளம் பற்றிய தகவல்கள் முக்கியமாக இருக்கின்றன. இன்றைக்குச் சுற்றுச்சூழல் மாசுபாடு, பருவநிலை மாற்றம் (Climate Change), வெப்பநிலை மாற்றம் (Temperature change) போன்றவை பற்றியும் வானிலை ஆய்வு மையங்களே ஆய்வு செய்கின்றன.

சரி, முதலில் பேசிய விஷயத்துக்கு வருவோம். பருவ மழை என்பது இந்தியா போன்ற ஒரு சில நாடுகளில் மட்டுமே உள்ள வானிலை அம்சம். அது பல்வேறு தாக்கங்களால் நிகழ்கிறது. எனவே, அதைத் துல்லியமாகக் கணிப்பது சாத்தியமில்லை.

## வரவிருக்கும் ஆபத்து



பசுமை இல்ல வாயு வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்தாவிடில் கடுமையான விளைவுகள் ஏற்படும். பருவநிலையில் ஏற்பட்டுவரும் மாற்றங்களால் எல்லாக் கண்டங்களிலும் எல்லாப் பெருங்கடல்களிலும் பாதிப்புகள் ஏற்பட்டுவருகின்றன. மனிதர்களுக்கு, தரைவாழ் உயிரினங்களுக்கு, கடல்வாழ் உயிரினங்களுக்கு அளவிட முடியாத சேதங்கள் ஏற்படத் தொடங்கிவிட்டன. நன்னீர் கிடைப்பது அரிதாகிக்கொண்டே வருகிறது. புதுப்பிக்கவல்ல குடிநீர் ஆதாரங்களான ஏரிகள், குளங்கள், குட்டைகள் மீள முடியாத நிலைக்கு வற்றிக்கொண்டிருக்கின்றன. நிலத்தடி நீர்வளமும் குறைந்துவருகிறது.

புவியில் வெப்ப அளவு ஒவ்வொரு டிகிரி உயரும்போதும், மக்கள்தொகையில் 7% அதிகரிக்கும்போதும் புதுப்பிக்கவல்ல நீர் ஆதாரங்கள் 20% அளவுக்குக் குறைகிறது. இந்தியா போன்ற நாடுகளில் பயிர் விளைச்சல் ஒவ்வொரு பத்தாண்டுக்கும் 0-0.2% குறையவிருக்கிறது. 2050 வரையில் ஒவ்வொரு பத்தாண்டும் உணவு தானியத் தேவை 14% அதிகரிக்கவிருக்கிறது.

ஆசியக் கண்டத்தில் மழை அளவு குறையும் அதே வேளையில், பெய்யும் மழையும் ஒரே சமயத்தில் பெய்து வெள்ளச் சேதங்களைக் கடுமையாக ஏற்படுத்திவிடும். இதனால் சாலை, தகவல்தொடர்பு, மின் தடங்கள் போன்ற அடித்தளக் கட்டமைப்புகளுக்கும் குடியிருப்புகளுக்கும் பலத்த சேதம் ஏற்படும். வெப்பம்

அதிகரிப்பதால் கோடையில் உயிரிழப்புகள் அதிகரிக்கும். வறட்சி காரணமாக குடிநீர், உணவு தானியங்களுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டு ஊட்டச்சத்துக் குறைவு ஏற்படும். மாறும் தட்பவெப்ப நிலைகளுக்கு ஏற்ப பெரும்பான்மை மக்களால் உடனடியாகத் தகவமைத்துக்கொள்ள முடியாது. அது அவர்களின் வளர்ச்சி, வாழ்நிலையை மிகவும் பாதிக்கும்.

இந்த அறிக்கை அதிகாரபூர்வமாக வெளியிடப்பட வில்லை. கசிந்த அறிக்கையிலிருந்து திரட்டப்பட்டவை இந்தத் தகவல்கள்.

## தேசிய உழவர் தினம்: அழிவின் விளிம்பில் இந்திய விவசாயம்

விவசாயக் குடும்பத்தில் பிறந்து, இந்தியாவின் பிரதமர் நாற்காலியை அலங்கரித்தவர் சௌத்ரி சரண்சிங். அவரது பிறந்த நாளே தேசிய உழவர் தினமாகக் கொண்டாடப்படுகிறது. ஆனால், உழவர் தினம் குறித்து தற்போது, விவசாயிகளிடமே போதிய விழிப்புணர்வு இல்லாத நிலை உள்ளது.

ஆங்கிலேயர் ஆதிக்கத்தின் கீழ் இருந்த 18-ம் நூற்றாண்டில், உலகின் வலுவான விவசாயப் பொருளாதாரத்தைக் கொண்ட நாடாக இந்தியா மிளிர்ந்தது. சுதந்திரத்துக்குப் பின் இந்திய விவசாயப் பொருளாதாரத்தில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டன.

### பசுமைப் புரட்சி

1960-ல் இந்திய விவசாயம் கடும் வறட்சியைச் சந்தித்தது. உணவுத் தட்டுப்பாட்டை சமாளிக்க அமெரிக்காவில் இருந்து, கோதுமை இறக்குமதி செய்யப்பட்டது. உணவு உற்பத்தியைப் பெருக்க, 1965-ல் பசுமைப் புரட்சி தொடங்கியது. ஆனாலும், இந்திய விவசாயிகளின் நிலைமை இன்றும் படுமோசமாகத்தான் உள்ளது.

**கட்டுப்படியான விலை**

கிரியேட் அமைப்பைச் சேர்ந்த ஓய்வுபெற்ற வேளாண் விற்பனைத் துறை அதிகாரி பொன்னம்பலம் கூறுகையில், “விவசாயத் தற்கொலைகள் அதிகரித்து வருகின்றன. தேசிய மாதிரி சர்வேயில், 8 சதவிகித மக்கள் விவசாயத்தை விட்டு வெளியேறிய தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. சுவாமிநாதன் கமிஷன் அறிக்கை, 40 சதவிகித மக்கள் விவசாயத்தை விட்டு வெளியேற இருப்பதாகச் சொல்கிறது.

விளை பொருள்களுக்கு கட்டுப்படியான விலை கிடைப்பதில்லை. தமிழகத்தில், 2000-2010 வரையுள்ள புள்ளி விவரங்களின்படி, ஏறக்குறைய 2 லட்சம் ஹெக்டேர் நெல் பயிரிடும் பரப்பு குறைந்துள்ளது. விவசாய நிலங்கள், வீட்டுமனைகள் ஆவதைத் தடுக்க வேண்டும். இதற்கென தேசிய கொள்கைகள் உருவாக்கப்பட்டு, உரிய சட்டங்கள் இயற்றப்பட வேண்டும். விளைவிக்கும் பொருளுக்கு விவசாயிகளே விலை நிர்ணயம் செய்யும் காலம் வரவேண்டும்” என்றார்.

நமது நெல்லைக் காப்போம் அமைப்பின் மாநில ஒருங்கிணைப்பாளர் தட்டிமேடு ஜெயராமன் கூறுகையில், “தமிழகத்தில் இருந்த 40,000 நீர் ஆதாரங்களில் 75 சதவிகித குளங்கள் ஆக்கிரமிப்பின் காரணமாக காணாமல் போய்விட்டன. விவசாயத்தை மீட்டெடுக்க அனைத்துக் கட்சிகளும் முன்வர வேண்டும்” என்றார்.